போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 6, 1923.

ந. 3(1).] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ பெப்ரவரி ௴ 6௳. [விலை, 2 அ. 3 பை.

சென்னை கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்ட திட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின்
ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னைச் சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் அதன் பகுதிகளைப்பற்றிய குறிப்புகளும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றன :—

No. 2 OF 1923.

1923-ம் ௵த்து 2-ம் நெ.

A BILL TO AMEND THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920.

1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

பீடிகை.

1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1. இந்த ஆக்டை, 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகள் (திருத்த) ஆக்டென்று சொல்லலாம்.

2. (1) ('ஷை ஆக்ட்' என்று இதில் பின்னால் குறிப்பிடப்படும்) 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டில், 'ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்' என்று பொருள்படும் வார்த்தைகள் வருகிற இடங்களிலெல்லாம் 'பிரதேச கவர்ன்மெண்டார்' என்று பொருள்படும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(2) இந்த ஆக்டுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலில் குறிப்பிடப்பட்ட ஷை ஆக்டைச் சேர்ந்த பிரிவுகளும் ஷெட்யூல்களும்-அதன் மூன்றாவது நான்காவது கலங்களில் கண்டிருக்கும் அளவுக்கும் மாதிரியாகவும் இதனால் திருத்தப்படுகின்றன.

3. ஷை ஆக்ட் 1-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

இது - சென்னை ராஜதானிப்பட்டணம் தவிர சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிக்கிறது.

4. ஷை ஆக்ட் 3-வது பிரிவைச் சேர்ந்த (8) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும:—

"(8) 'கம்பெனி' என்பது - 1913-ம்௵த்திய இந்துதேசத்து கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் அர்த்தம் சொல்லியுள்ளபடியிருக்கிற, அல்லது பார்லிமெண்ட் சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் ராயல் சார்ட்டர் அல்லது லெட்டர்ஸ் பேடெண்ட் என்னும் அதிகாரபத்திரத்தையாகிலும் ப்ரிடிஷ் ராஜ்ஜியத்திலுள்ள யாதொரு சட்ட நிருபண சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்டையாகிலும் அனுசரித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிற யாதொரு கம்பெனி என்று அர்த்தமாவதுமல்லாமல், சட்டப்படி சேர்ந்தாயிருந்தாலும் இராவிட்டாலும் அதனுடைய பிரதான தொழிலிடம் ப்ரிடிஷ் இந்தியாவில் இருந்தாலும் இராவிட்டாலும் ப்ரிடிஷ் இந்தியாவில் தொழில் நடத்துகிற அன்னியர்கள் சேர்ந்த எந்தக் கூட்டத்தை போர்ட் ஆவ் இன்லண்ட் ரெவினியு என்னும் உள்நாட்டு வருமான சம்பந்தமான சபையார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலமாய் 1922-ம்௵த்திய இந்துதேசத்து வருமானவரி ஆக்டின் காரியங்களுக்காக ஒரு கம்பெனியென்று நிர்ணயிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு கூட்டம் என்பதும் அதில் அடங்கும்."

5. ஷை ஆக்ட் 4-வது பிரிவைச் சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும:—

"(5) 1920-ம்௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் செலாவணியாய்க்கொண்டிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் மியுனிஸிபாலிடியாக ஏற்படுத்தப்பட்டாலும் யாதொரு மியுனிஸிபாலிடியில் சேர்க்கப்பட்டாலும், பிரஸ்தாப பிரதேச விஸ்தீர்ணத்திலிருக்கிற யாதொரு பிரதேச சபையின் ஆஸ்தியையாவது சொத்தையாவது ஸ்தாபனங்களையாவது அப்படிப்பட்ட மியுனிஸிபாலிடியின் கௌன்ஸிலுக்கு ட்ரான்ஸ்பர் செய்வது விஷயமாக அல்லது அந்த ஆஸ்தியையாகிலும் சொத்தையாகிலும் ஸ்தாபனங்களையாகிலும் வேறே விதமாய் ஒருவகை செய்வது விஷயமாகவும், அப்படிப்பட்ட சொத்துக்காவது ஸ்தாபனங்களுக்காவது சம்பந்தப்பட்டவையாய் ஷை பிரதேச சபையாருக்குக் கடன்கள் எவையேனும் இருந்தால் அவைகளைத் தீர்ப்பது விஷயமாகவும் பிரதேச கவர்ன்மெண்டார் - தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவு பிறப்பிக்கலாம்."

6. ஷை ஆக்ட் 9-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:

(1) முந்திய பிரிவின்படி நடத்தப்படும் யாதொரு எலெக்ஷனில் கௌன்ஸிலர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், அக்கிராசனாதிபதி நிச்சயிக்கக்கூடிய தினத்தில் புதிதாய் எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

(2) அந்தப்படி புதிதாய் நடத்தப்படும் எலெக்ஷனில் கௌன்ஸிலர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் - யோக்கியதை பெற்ற யாதொரு நபரை அந்தக் காலிஸ்தானத்தைப் பூர்த்திசெய்வதற்காக நியமிக்கலாம்.

(b) (3) குறிப்பிட்ட உட்பிரிவில், 'நியமிக்கப்பட்ட, தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக பாவிக்கப்பட்ட' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

7. ஷை ஆக்ட் 12-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (4) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அக்கிராசனாதிபதியானவர்' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'நியமன உத்தரவில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (7) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

"(7) தெரிந்தெடுக்கப்பட்ட அக்கிராசனாதிபதியின் உத்தியோகம் காலியாயிருந்து, உப அக்கிராசனாதிபதி எவரும் இல்லாமலிருந்தாலும், உப அக்கிராசனாதிபதி இராமலோ (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராகவோ இருந்தாலும், பிரஸ்தாப மியுனிஸிபாலிடி

எந்த ரெவினியு டிவிழனில் இருக்கிறதோ அந்த ரெவினியு டிவிழனின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தரானவர்-கௌன்ஸிலர்களுக்கு நியாயமான நோடிஸ் கொடுத்த பிறகு, அக்கிராசனாதிபதியைத் தெரிந்தெடுப்பதற்காக ஒரு சபை கூட்டலாம்; மேலும், புதிய அக்கிராசனாதிபதி அந்தப்படி தெரிந்தெடுக்கப்பட்டு உத்தியோகம் வகிக்கத் தொடங்குகிற வரையில் ஷை ரெவினியு டிவிழனல் ஆபிஸரானவர் - இந்த ஆக்டிலாவது அதன்படி பிறப்பிக்கப்பட்ட விதிகளிலாவது விளம்பரங்களிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஷை கௌன்ஸிலின் உத்தியோக முறைமைபடிக்கான மெம்பராகவும் அக்கிராசனாதிபதியாகவும் இருக்கவேண்டும்.''

8. ஷை ஆக்ட் 18-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (2) குறிப்பிட்ட உட்பிரிவில், இரண்டாவது வாக்கியத்திலே, 'உப அக்கிராசனாதிபதி ஒருவர் இராவிட்டாலும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'உப அக்கிராசனாதிபதி இராமலோ (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராகவோ இருந்தாலும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (4) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும்:—

"(5) அக்கிராசனாதிபதியானவர் தம்முடைய அதிகாரங்களையாவது, கடமைகளையாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு கௌன்ஸிலருக்குப் பிரித்துக் கொடுக்காமலிருந்தால், அக்கிராசனாதிபதியின் அலுவல்களை, அக்கிராசனாதிபதி உப அக்கிராசனாதிபதி ஆகிய இருவர்களும் சிறிது காலத்துக்கு ஊரிலில்லாமலிருந்தாலும் (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராயிருந்தாலும் அந்த காலத்தில், ரெவினியு டிவிழனல் ஆபிஸர் செய்யவேண்டியவராவார்; அவர் - ஷை கால அளவிலே உத்தியோக முறைமையில் கௌன்ஸிலின் மெம்பராகவும் அக்கிராசனாதிபதியாகவும் இருப்பதாகக் கருதப்படுவார்."

9. ஷை ஆக்ட் 20-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அக்கிராசனாதிபதியைக் கேள்வி கேட்கவும் தீர்மானங்கள் கொண்டுவரவும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'தீர்மானங்கள் கொண்டுவரவும் அக்கிராசனாதிபதியைக் கேள்விகேட்கவும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

10. ஷை ஆக்ட் 23-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும்:—

"23. யாதொரு கௌன்ஸிலார் - தாங்கள் பிரித்துக் கொடுக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தும் காரியத்துக்காகவாகிலும் கடமைகளைச் செய்யும் காரியத்துக்காகவாகிலும் அலுவல்களை நிறைவேற்றும் காரியத்துக்காகவாகிலும் கம்மிட்டிகளை ஏற்படுத்தலாம்; அல்லது, தனிமெம்பர்களையாவது கம்மிட்டிகளையாவது நியமித்து அவர்களுடைய அபிப்பிராயத்துக்குத் தாங்கள் அனுப்பக்கூடிய விஷயங்களைப்பற்றி விசாரணை செய்து ரிபோர்ட் செய்யும்படியோ ஆலோசனை சொல்லும்படியோ கேட்கலாம்."

11. ஷை ஆக்ட் 24-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) இரண்டாவது வாக்கியத்தில், 'நபர்களின் சங்கியையானது', 'அந்தக் கம்மிட்டியிலுள்ள மெம்பர்களின்' என்னும் வார்த்தைகளுக்கு இடையில் 'பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியுடனன்றி மற்றப்படி' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்;

(b) மூன்றாவது வாக்கியத்தில், 'பெண்பாலாயிருப்பதனால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'வாசஸ்தலத்தின் காரணமாய்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

12. ஷை ஆக்ட் 25-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) 'ரெகுலேஷன்களை' என்னும் வார்த்தைக்கு முன்னிருக்கும் 'உடன்சேர்க்கையான' என்னும் வார்த்தையை விட்டுவிடவேண்டும்.

(b) (c) குறிப்பிட்ட பகுதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும்:—

"(c) சபைகளில் ஒழுங்கு தவறாதிருக்கும்படி பார்த்துக்கொள்வதும் சபையில் நடவடிக்கைகள் நடத்துவதும், ஒழுங்கு சம்பந்தமான விஷயங்களைக்குறித்து தங்களுடைய தீர்மானங்களைச் செலாவணியாகச் செய்யும் காரியத்துக்காக அக்கிராசனாதிபதிகள் செலுத்தக்கூடிய அதிகாரங்களும்."

(c) (e) குறிப்பிட்ட பகுதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துககொள்ள வேண்டும்:—

"(e) ரிபோர்ட்செய்வதற்கும் ஆலோசனை சொல்வதற்குமான கம்மிட்டிகளைத் தவிர இதர கம்மிட்டிகளை ஏற்படுத்துவதும் அந்தக் கம்மிட்டிகளின் நடவடிக்கை முறைக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் நிச்சயிப்பதும்."

(d) (f) குறிப்பிட்ட பகுதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டவைகளை அமைத்துக்துக்கொண்டு, ஏற்கனவேயுள்ள (f), (g) குறிப்பிட்டிருக்கும் பகுதிகளுக்கு முறையே (g), (h) என்று குறிப்பிடவேண்டும் :—

"(f) அதிகாரங்கள், கடமைகள் அல்லது அலுவல்களை—

(i) அக்கிராசனாதிபதி, கௌன்ஸிலர், யாதொரு மியுனிஸிபல் ஊழியக்காரர் அல்லது கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தருக்காவது,

(ii) (e) குறிப்பிட்ட பகுதியின்படி ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டி அல்லது அதன் அக்கிராசனாதிபதிக்காவது

பிரித்துக்கொடுப்பதும்."

13. ஷை ஆக்ட் 26-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"26. (1) யாதொரு கௌன்ஸிலார் - எந்தக் காரியத்தில் தாங்களும் ஒரு பிரதேச அதிகார சபை அல்லது பல பிரதேச அதிகார சபைகளும் கூட்டாய் அக்கறையுடையவர்களாயிருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு காரியத்துக்காகவாகிலும் அவர்கள் கூட்டாக உத்தரவாதிகளாயிருக்கும் யாதொரு விஷயத்துக்காகவாகிலும் ஒரு கூட்டுக் கம்மிட்டி ஏற்படுத்துவதில் ஷை சபை அல்லது சபைகளுடன் சேரலாம் ; மேலும், பிரதேச கவர்ன்மென்டார் அந்தப்படி உத்தரவு செய்தால், அப்படியே சேரவேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்களா யிராவிட்டாலும், யாதொரு கூட்டுக் கம்மிட்டியில் வேலை பார்ப்பதற்கு விசேஷ யோக்கியதாம்சங்கள் உடையவர்களென்று ஷை சபையார் அபிப்பிராயப்படக்கூடிய நபர்கள் அந்தக் கம்மிட்டியில் சேர்ந்திருக்கலாம் ; ஆனால், அப்படிப்பட்ட நபர்களின் சங்கியையானது பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியுடனன்றி மற்றப்படி, கூட்டுக் கம்மிட்டியிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாயிருக்கக்கூடாது.

(3) யாதொரு கூட்டுக் கம்மிட்டியானது ரெகுலேஷன்கள் மூலமாய் ஏற்படுத்தப்படவேண்டும் ; அந்த ரெகுலேஷன்கள் - கடைசி உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற விஷயத்திலன்றி மற்றப்படி, சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகள் ஒவ்வொன்றினாலும் ஒப்புக்கொள்ளப்பட்டாலொழிய செலாவணியாகமாட்டா.

(4) ஷை ரெகுலேஷன்களில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி நிர்ணயிக்கலாம் :—

(a) கூட்டுக் கம்மிட்டியைச் சேர்ந்த மெம்பர்களின் மொத்த சங்கியை இன்னதென்பது ;

(b) இத்தனை பேர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்களாயிருக்கவேண்டுமென்பதும் இத்தனை பேர்கள் வெளியார்களாயிருக்கலாமென்பதும் ;

(c) இன்ன நபர்கள் கூட்டுக் கம்மிட்டியின் மெம்பர்களாயிருக்கவேண்டுமென்பது அல்லது அவர்கள் இன்னவிதமாய் நியமிக்கப்படவேண்டும் அல்லது தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பது ;

(d) இன்ன நபர் கூட்டுக் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியாயிருக்கவேண்டுமென்பது அல்லது அவர் இன்னவிதமாய் நியமிக்கப்படவேண்டும் அல்லது தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பது ;

(e) மெம்பர்கள் அக்கிராசனாதிபதி ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு இன்னதென்பது ;

(f) சம்பந்தப்பட்ட ஒரு அதிகார சபையாவது பல அதிகார சபைகளாவது செலுத்தக்கூடியவையாயுள்ள அதிகாரங்களில், இன்ன அதிகாரங்களைக் கூட்டுக் கம்மிட்டியார் செலுத்தலாமென்பது ;

(g) அப்படிப்பட்ட கம்மிட்டிகளின் நடவடிக்கைமுறை இன்னதென்பது.

(5) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்களை மாற்றவாவது ரத்துசெய்யவாவது சம்பந்தப்பட்ட சகல அதிகார சபைகளும் சம்மதிக்கிறபட்சத்தில் அந்தப்படியே மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

(6) இந்தப் பிரிவின் மூக்கிய நிபந்தனைகளில் எதன்படியாவது பிரதேச அதிகார சபைகளுக்குள் அபிப்பிராயபேதம் ஏதாவது உண்டானால், அது விஷயத்தைப் பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பவேண்டும் ; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(7) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரதேச கவர்ன்மென்டார் நடவடிக்கை நடத்தினால், அவர்கள் - (4) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் சகல விஷயங்கள் சம்பந்தமாகவாவது அவைகளில் எதன் சம்பந்தமாகவாவது தங்களுக்கு அவசியமாகவாகிலும் உசிதமாகவாகிலும் தோற்றும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்."

14. ௸ ஆக்ட் 31-வது பிரிவின் கடைசியில் அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

" அந்த ராஜிநாமாவானது - கௌன்ஸிலர் விஷயத்தில் அது அக்கிராசனாதிபதியால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்தும், அக்கிராசனாதிபதியின் விஷயத்தில் அது கௌன்ஸிலின்முன் வைக்கப்படும் தேதியிலிருந்தும் செலாவணியாகவேண்டும்."

15. ௸ ஆக்ட் 32-வது பிரிவில், 'அப்படிப்பட்ட உத்தியோகத்திலிருப்பதற்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அப்படிப்பட்ட உத்தியோகம் வகிப்பதற்காவது அதில் இருந்துவருவதற்காவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

16. ௸ ஆக்ட் 43-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

" (3) யாதொரு வார்டினால் தெரிந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியை மாற்றப்பட்டாலும் புதிதாய் ஒரு வார்ட் ஏற்படுத்தப்பட்டாலும், கௌன்ஸிலார் - கௌன்ஸிலில் அப்போதிருக்கும் ஒவ்வொரு தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பரும் இன்ன வார்டின் பிரதிநிதியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்றும், கௌன்ஸிலிலுள்ள காலிஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதற்காக இன்ன வார்ட் அல்லது வார்டுகளில் எலெக்ஷன்கள் நடத்தப்படவேண்டுமென்றும் நிச்சயிக்கவேண்டும்."

17. ௸ ஆக்ட் 45-வது பிரிவைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட உட்பிரிவின் கடைசியில் அடியிற்கண்ட விவரணத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

விவரணம்.—யாதொரு நபர் தனி கொதுவைதாரர் - குடிக்கூலிக்கு இருப்பவர் - கார்டியன் அல்லது எக்ஸிக்யூடராகவாவது, அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரல் அல்லது அபிஷியல் ட்ரஸ்டியல்லாத வேறே தனி அட்மினிஸ்ட்ரேடர் அல்லது ட்ரஸ்டியாகவாவது சொத்து வரி, கம்பெனிகளுக்கு வரி அல்லது தொழில் வரி செலுத்தியிருந்தால் அந்த வரிகள் விஷயமாய் (c) குறிப்பிட்ட பகுதியில் செலுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிற தொகையைச் செலுத்தியிருப்பதாகக் கருதப்படுவார்.

18. ௸ ஆக்ட் 46-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் 'யாதொரு வரியையாவது 79-வது பிரிவைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட வரியையாவது மேலேகண்ட முந்திய வருஷத்தில் செலுத்தியிருந்தாலன்றி மற்றப்படி' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'யாதொரு வரியாவது, 79-வது பிரிவைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட வரியாவது மேலேகண்ட முந்திய வருஷத்தில் அவருக்கு விதிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொண்டு, விவரணத்தை விட்டுவிடவேண்டும்.

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'யாதொரு கம்பெனியாராவது (அஸோஸியேஷன்) கூட்டத்தாராவது 78-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அல்லது (c) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட வரியையாகிலும் 79-வது பிரிவைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட வரியையாகிலும் செலுத்தியிருந்தால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'யாதொரு கம்பெனிக்காவது (அஸோஸியேஷன்) கூட்டத்துக்காவது 78-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அல்லது (c) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட வரியாகிலும் 79-வது பிரிவைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட வரியாகிலும் விதிக்கப்பட்டிருந்தால்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

19. ௸ ஆக்ட் 47-வது பிரிவில், 'மேலும், 60-வது பிரிவின்படி யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்டு இன்னும் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு உத்தரவில் நிச்சயிக்கப்பட்ட காலத்துக்கு எந்த நபரும் வோட் கொடுக்க யோக்கியதை பெற்றவராகமாட்டார்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

20. ௸ ஆக்ட் 48-வது பிரிவில், அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) ௸ ஆக்ட் 48-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், முதலிலுள்ள '(a)' என்னும் எழுத்தையும் நகவளைவுக் குறிகளையும், (b) அடையாளமிட்ட பகுதி முழுவதையும் விட்டுவிட்டு, (a) அடையாளமிட்ட பகுதியின் கடைசியிலுள்ள 'மற்றப்படிக்கும்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'மற்றப்படி' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

(3) யாதொரு நபர் கவர்ன்மென்டைச் சேர்ந்த சம்பளம் பெறும் உத்தியோகஸ்தரா இல்லையாவென்பதைப்பற்றி யாதொரு பிரசினை ஏற்பட்டால், அது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரின் தீர்மானம் முடிவானதாகும்.

21. ஷை ஆக்ட் 49-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (2) குறிப்பிட்ட உட்பிரிவில்—

(i) இப்போதிருக்கும் (i) முதல் (vi) வரையிலுள்ள பகுதிகளுக்கு (a) முதல் (f) வரையிலுள்ள பகுதிகளாக அடையாளமிட்டு, அந்தப்படி (c), (d) என்று அடையாளமிட்ட பகுதிகளுக்கு இடையில் இப்போதிருக்கும் விலக்கு நிபந்தனையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(ii) அந்தப்படி (d) என்று அடையாள மிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

ஆனால், யாதொரு நபர் ஹானரெரி மாஜிஸ்ட்ரேட் உத்தியோகத்தை ராஜிநாமா செய்திருந்து அந்த ராஜிநாமாவானது நேமக தேதிக்குமுன் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் ஆபிஸில் வந்து சேர்ந்திருந்தால், அவர் - யாதொரு எலெக்ஷனில் அபேக்ஷகராய் நேமகஞ் செய்யப்படுவதற்கு யோக்கியதை பெற்றவராயிருப்பதாகக் கருதப்படும்.

(b) (4) குறிப்பிட்ட உட்பிரிவை விட்டுவிடவேண்டும்.

22. ஷை ஆக்ட் 50-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவில், ‘அது விஷயத்தைக் கௌன்ஸிலின் அடுத்த சபையில் அக்கிராசனாதிபதி தெரிவிக்கவேண்டும்; கௌன்ஸிலார் - அந்த நபரை அந்த சபையிலேயே கௌன்ஸிலராக மறுபடியும் சேர்த்துக்கொள்ளலாம்’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, ‘அவர் தாம் கௌன்ஸிலராயிருப்பது நின்றுபோனதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் தம்மை மறுபடியும் கௌன்ஸிலராய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டால், கௌன்ஸிலார் - அந்த விண்ணப்பம் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அடுத்து வரும் கௌன்ஸிலின் சபையில் அவரைமறுபடியும் கௌன்ஸிலராகச் சேர்த்துக்கொள்ளலாம்’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

23. ஷை ஆக்டின் 52, 53, 54, 55, 57, 58, 59-வது பிரிவுகளை விட்டுவிடவேண்டும்.

24. ஷை ஆக்ட் 60-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

“60. 56-வது பிரிவின்படியாவது இந்தியன் பினல் கோட் IX-A அதிகாரத்தின்படியாவது தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றத்தைச் செய்து குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் - அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட தேதி முதல் ஐந்து வருஷகாலத்துக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற யாதொரு எலெக்ஷனில் வோட் கொடுப்பதற்கோ தெரிந்தெடுக்கப்படுவதற்கோ மியுனிஸிபல் கௌன்ஸிலர் அல்லது அக்கிராசனாதிபதி உத்தியோகத்தை வகிப்பதற்கோ தகுதியற்றவராவார் :

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட யாதொரு நபரை அந்தப்படி தகுதியற்றவராயிருப்பதனின்றும் நிவாரணை செய்யலாம்.”

25. ஷை ஆக்ட் 68-வது பிரிவைச் சேர்ந்த (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளில், ‘500’ என்னும் இலக்கத்துக்கு பர்த்தியாக ‘1000’ என்னும் இலக்கத்தை அமைத்துக்கொள்ளவேண்டும்.

26. ஷை ஆக்ட் 70-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

“70. (1) மியுனிஸிபல் உத்தியோகஸ்தர்கள் ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் சங்கியையையும் உத்தியோகப்பெயர்களையும் அந்தஸ்துகளையும் அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள், கட்டணங்கள், வர்த்தனைகள் ஆகிய இவைகளையும் நிஷ்கரிஷை செய்வதற்காவது மாற்றுவதற்காவது சம்பந்தப்பட்ட சகல பிரேரேபனைகளுக்கும் கௌன்ஸிலாரின் அனுமதியைப்பெறவேண்டும்.

(2) ஷை பிரேரேபனைகள்-அக்கிராசனாதிபதி கேட்டுக்கொள்வதன்மேல் மாத்திரமே கௌன்ஸிலாரால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்; மேலும், கௌன்ஸிலார் - திருத்தங்களுடனாவது திருத்தங்களில்லாமலாவது அவைகளை ஜாரிசெய்யலாம்.”

27. ஷை ஆக்ட் 71-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், ‘(சிப்பந்திப்)பட்டியில் ஒரு ஸெக்ரெடரி (காரியதரிசி)யின் உத்தியோகத்தையும் சேர்க்கலாம்’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘ஒரு ஸெக்ரெடரி (காரியதரிசி)யின் உத்தியோகத்துக்குக் கௌன்ஸிலார் அனுமதிகொடுக்கலாம்’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவில், ‘ஒரு ஹெல்த் (சுகாதார) ஆபிஸர் உத்தியோகத்தையும் ஒரு மியுனிஸிபல் என்ஜினீர் உத்தியோகத்தையும் (சிப்பந்திப்) பட்டியில் சேர்க்கலாம்’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, ‘ஒரு ஹெல்த் (சுகாதார) ஆபிஸர் உத்தியோகத்துக்கும் ஒரு மியுனிஸிபல் என்ஜினீர் உத்தியோகத்துக்கும் அனுமதிகொடுக்கலாம்’

என்னும் வார்த்தைகளையும், 'அந்தப்படி சேர்க்கவேண்டும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அந்தப்படி அனுமதி கொடுக்கவேண்டும்' என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) (3) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

"(3) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் எவரும் - கௌன்ஸிலாரின் அனுமதி யில்லாமல் வேறே யாதொரு தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரம் செய்யக் கூடாது."

28. ஷை ஆக்ட் 73-வது பிரிவில் 'சிப்பந்திப்பட்டியையும்' என்னும் வார்த்தையை விட்டுவிட்டு, 'விதிகளையும்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'விதிகளை' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

29. ஷை ஆக்ட் 74-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் ;—

(a) (c) குறிப்பிட்ட பகுதியில், 'வர்த்தனை கொடுப்பதைக்குறித்தும்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு 'பிரயாண வர்த்தனை கொடுப்பதைக்குறித்தும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (i) குறிப்பிட்ட விலக்கு நிபந்தனையில், 'ரஜாவர்த்தனையும்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு 'பிரயாண வர்த்தனையும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

30. ஷை ஆக்ட் 78-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவுடன் சேர்ந்திருக்கும் முதல் விலக்கு நிபந்தனையில், 'அமுலுக்குக் கொண்டுவருவதற்குமுன்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ஜாரி செய்வதற்குமுன்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும், அடியிற்கண்ட உடன்சேர்க்கையான விலக்கு நிபந்தனையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"அன்றியும், இந்தப்பிரிவின்படியுள்ள யாதொரு தீர்மானம் குறித்த ஒரு வருஷத்துக்காக அமுலுக்கு வந்திருக்கும்போது, அப்படிப்பட்ட தீர்மானத்தில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் வீதங்களையாவது தேதிகளையாவது அந்த வருஷம் சம்பந்தப்பட்டவரையில் மாற்றுவதற்கான எந்த பிரேரேபணைகளையும், பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதி அல்லது அவர்களுடைய கட்டளையில்லாமல், கௌன்ஸிலார் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது."

31. ஷை ஆக்ட் 79-வது பிரிவைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட பகுதியில், அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) 'மியுனிஸிபாலிடிக்குள் பிரவேசிக்கும் அல்லது அதைவிட்டு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'மியுனிஸிபாலிடியைவிட்டு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) 'மியுனிஸிபாலிடியை விட்டாவது' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு 'அதற்குச் சமீபத்திலுள்ள இடத்தை விட்டாவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்வேண்டும்.

(c) அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் —

"ஆனால், அப்படிப்பட்ட வரியிலிருந்து கிடைக்கும் வரும்படியில் எவ்வளவு பாகத்தையும், பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியுடனன்றி மற்றப்படி, யாத்திரைக்காரர்களின் தேகாரோக்கியம் சௌகரியம் ஆகிய இவைகளுக்காகவாவது யாத்திரை ஸ்தலத்தை சீர்த்திருத்துவது அல்லது விருத்தி செய்வதற்காகவாவது ஏற்பாடுகள் செய்வதைத் தவிர வேறே எந்தக் காரியங்களுக்காகவும் செலவுபண்ணக்கூடாது."

32. ஷை ஆக்ட் 80-வது பிரிவில், 'அதில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து' என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, 'இன்ன வீதப்படி' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'இன்ன வீதப்படியும் இன்ன தேதியிலிருந்தும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

33. ஷை ஆக்ட் 81-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே—

(i) 'ஒன்றுயச் சேர்த்து விதிக்கும் ஒரு வீதப்படி' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

(ii), (iii) [இந்தப் பகுதிகளில் கண்ட திருத்தங்கள் தமிழ்மொழி பெயர்ப்பில் அவசியமில்லை.]

(iv) (b) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்டதை ஒரு புதிய பகுதியாய் அமைத்துக்கொண்டு இப்போதிருக்கும் (c) அடையாளமிட்ட பகுதிக்கு (d) என்று மீண்டும் அடையாளம் போடவேண்டும் :

"(c) தனி நபர்களுடைய வளவுகளிலிருந்து குப்பைகூளம், அசுத்தங்கள் அல்லது பிராணிகளின் பிரேதங்களை அப்புறப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு ஏற்பாடு செய்வதற்காக கக்கூஸ் வரியும்."

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவிலே,

(i) ஆரம்பத்தில் 'இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி,' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(ii) 'சகல நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பிலும் கட்டிடங்களின் வருஷவாரி வாடகை மதிப்பிலும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'நிலங்கள் அல்லது கட்டிடங்கள் அல்லது இவ்விரண்டின் வருஷவாரி வாடகை மதிப்பில்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(c) (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"(3) முழுவதும் விவசாய காரியங்களுக்காக உபயோகிக்கப்படாமலும், கட்டிடங்கள் இராமல் அல்லது கட்டிடங்களைச் சேர்ந்தவைகளாயிராமலுமுள்ள நிலங்களின் விஷயத்தில், மியுனிஸிபல் கௌன்ஸிலார் - அந்த நிலங்களின் மூலதன மதிப்பில் நூற்றுக்கு இவ்வளவென்று தாங்கள் நிச்சயிக்கக்கூடிய வீதப்படி இந்த வரிகளை விதித்து வாங்கலாம் :

ஆனால், மேலே கண்டபடி நூற்றுக்கு இவ்வளவென்று ஏற்படுத்தும் வீதங்களானவை பிரதேச கவர்ன்மென்டார் உச்ச வீதங்கள் எவையேனும் ஏற்படுத்தியிருந்தால் அவைகளுக்கு அதிகப்படக்கூடாது ; மேலும், அப்படிப்பட்ட நிலங்களின் மூலதன மதிப்பானது - நிர்ணயிக்கப்படக்கூடிய மாதிரியாய் நிச்சயிக்கப்படவேண்டும்."

34. ஷை ஆக்ட் 82-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'குடிக்கூலித் தொகையில்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு 'கட்டிடங்களின் விஷயத்தில் மாத்திரம்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) விலக்கு நிபந்தனையில்—

(i) (a) அடையாளமிட்ட பகுதியில், 'சாதாரணமாய்க் குடிகூலிக்கு விடப்படாத வகையைச்சேர்ந்த கட்டிடங்களின் மொத்த வருஷவாரி வாடகைத் தொகை இவ்வளவென மதிப்பிட்டு ஏற்படுத்தமுடியாதென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுவாராகில்,' என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக, 'ரெயில்வே கட்டிடங்கள், கவர்ன்மென்ட் கட்டிடங்கள் ஆகிய இவைகளின் விஷயத்திலும் எந்தக் கட்டிடங்களின் மொத்த வருஷவாரி வாடகைத் தொகை இவ்வளவென மதிப்பிட்டு ஏற்படுத்தமுடியாதென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்படுகிறாரோ அந்தக் கட்டிடங்களின் விஷயத்திலும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொண்டு, 'அதே வளவுகளின் பாகமாயிருப்பதாலக்கொண்டு அந்தக் கட்டிடங்களோடுகூட மதிப்பிடப்பட்டிருக்கிற' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

(ii) (b) அடையாளமிட்ட பகுதியில், 'யந்திரத்தின் மதிப்பை' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யந்திரங்கள், மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் ஆகிய இவைகளின் மதிப்பை' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

35. ஷை ஆக்ட் 83-வது பிரிவில், அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) இப்போதிருக்கும் உட்பிரிவுக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவென்று இலக்கமிட வேண்டும்.

(b) (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"(2) யாதொரு நிலமானது விவசாய சம்பந்தமான காரியங்களுக்கு மாத்திரமே உபயோகிக்கப்பட்டு, எவை காரணமாக வரி விதிக்கப்படுகிறதோ அந்த தண்ணீர் சம்பந்தமான அல்லது ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலைகளிலிருந்து எவ்வித பிரயோஜனமும் அடையாமலிருந்தால், அப்படிப்பட்ட யாதொரு நிலத்தின்மேல் தண்ணீர் - சாக்கடை வரி விதித்து வாங்கக்கூடாது.

(3) பிரதேச கவர்ன்மென்டார் - ஜலசர்ப்பரா ஜலதாரை சம்பந்தமான ஏற்பாட்டினாலாவது விளக்கு சம்பந்தமான ஏற்பாட்டினாலாவது கிடைக்கக்கூடிய முழுபிரயோசனத்தையும் மியுனிஸிபாலிடியின் குறித்த யாதொரு பாகம் அடையவில்லை என்னும் காரணத்தைக்கொண்டு அந்த விஸ்தீர்ணத்தைத் தண்ணீர் - சாக்கடை வரி அல்லது விளக்கு வரி முழுவதையுமாகிலும் அதன் ஒரு பாகத்தையாகிலும் செலுத்துவதனின்றும் விளம்பரமூலமாக நிவாரணை செய்யலாம்.

(4) யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராவது அனுபோகதாரராவது அந்தக் கட்டிடம் அல்லது நிலத்திலிருந்து குப்பை கூளத்தையும் அசுத்தங்களையும்

பிராணிகளின் பிரேதங்களேயும் அன்றாடம் அப்புறப்படுத்துவதற்குத் திறமையான ஏற்பாடுகள் செய்திருக்கிறரென்று மியுனிஸிபல் கௌன்ஸிலார் தெரிந்து திருப்தியடைந்தால், அவர்கள் - ஷை கட்டிடம் அல்லது நிலத்தை, கக்கூஸ்வரி முழுவதையுமாகிலும் அதில் ஒரு பாகத்தையாகிலும் செலுத்துவதனின்றும் நிவாரணை செய்யலாம்.

(5) மியுனிஸிபல் கௌன்ஸிலார் பொதுவான தீர்மான மூலமாக,—

(i) யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பானது பதினெட்டு ரூபாய்க்கு மேற்படாமல் ஷை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு தொகைக்கு அதிகமாயிராத பட்சத்திலும்,

(ii) அதன் சொந்தக்காரருக்கு சொத்து வரி விதிக்கப்பட்ட வேறே யாதொரு கட்டிடமாவது நிலமாவது இல்லாமலிருந்து, அவர் கம்பெனி வரி, தொழில் வரி அல்லது வருமான வரி செலுத்துவதற்கு உட்பட்டவராயிராத பட்சத்திலும்,

ஷை கட்டிடம் அல்லது நிலத்துக்கு சொத்து வரி விதிக்காமல் நிவாரணை செய்யலாம்.''

36. ஷை ஆக்ட் 84-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

''84. (1) யாதொரு வகுப்பைச் சேர்ந்த சொத்து வரி நிலங்களின் வருஷவாரி மதிப்பை அனுசரித்து அவைகளுக்கு விதிக்கப்பட்டால், அதன் வீதமானது-கட்டிடங்களுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த சொத்துவரி விதிக்கப்படும் வீதத்தினின்றும் வித்தியாசப்படலாம் ; ஆனல், அப்படிப்பட்ட வீதமானது - மியுனிஸிபல் விஸ்தீர்ணம் முழுவதும் சந்தர்ப்பத்துக் கேற்றபடி சகல கட்டிடங்களுக்காவது வருஷவாரி மதிப்பின்மேல் வரி விதிக்கப்படக்கூடிய சகல நிலங்களுக்காவது ஒரே மாதிரியாயிருக்கவேண்டும்:

ஆனல், லைட்ஹௌஸ் என்னும் விளக்குக்கூண்டுகள் சமுத்திர வராவதிகள், ஏற்றிரக்குமதிக்கான செய்சரைகள் (wharves), ஜெட்டிகள் (அணைகள்) ஆகிய இவைகளின் விஷயத்தில் விதிக்கப்படக்கூடிய மொத்த சொத்து வரியானது அவைகளின் வருஷவாரி மதிப்பில் நூற்றில் நாலுக்கு மேற்படக்கூடாது.

(2) மூலதன மதிப்பை அனுசரித்து வரி விதிக்கப்படக்கூடிய சகல நிலங்களின் விஷயத்திலும் யாதொரு வகுப்பைச் சேர்ந்த சொத்து வரி வீதமானது மியுனிஸிபல் விஸ்தீர்ணம் முழுவதுக்கும் ஒரே மாதிரியாயிருக்கவேண்டும்.''

37. ஷை ஆக்ட் 86-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

''86. 4-வது ஷெட்யூலில் வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, சொத்து வரியை, வரி விதிகப்பட்ட வளவின் சொந்தக்காரர் ஒவ்வொரு அரைவருஷம் ஆரம்பித்தபிறகும் முப்பது தினங்களுக்குள் செலுத்திவிடவேண்டும்.''

38. ஷை ஆக்ட் 87-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அந்த அரை வருஷத்திற்கு பாக்கியாயிருக்கிற' என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, 'வரித்தொகையில் பாதிக்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'வரித்தொகையில் கட்டிடங்களுக்கு மாத்திரம் சம்பந்தப்படுகிற பாகத்தில் பாதிக்கு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்வதுமல்லாமல், 'அந்தக் கட்டிடம்' என்னும் வார்த்தைகளுக்கு முன் 'அந்த அரை வருஷத்தில்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவும்வேண்டும்.

39 ஷை ஆக்ட் 91-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அகல நீள முதலிய விவரங்களைக்குறித்த ரிடர்னையும்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு 'அக்கிராசனதிபதிக்கு அவசியமாயிருக்கக்கூடிய வேறே சமாசாரத்தையும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

40. ஷை ஆக்ட் 92-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

''92. (1) கம்பெனிகளுக்கு வரி விதிக்கப்படுமென்று யாதொரு அக்கிராசனதிபதியானவர் 80-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரித்தால், அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பிறகு அந்த மியுனிஸிபாலிடியில் யாதொரு அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினம் வியாபாரம் நடத்துகிற அல்லது நடத்தியிருக்கிற ஒவ்வொரு கம்பெனியாரும் - அந்தக் கம்பெனியார் ஷை மியுனிஸிபாலிடியில் நடத்தியிருக்கிற மொத்த வியாபார மதிப்பின் மேல் ஷை அரை வருஷத்துக்கு ஒரு வரி செலுத்தவேண்டும்:

ஆனல், எந்தக் கம்பெனிகளின் அரைவருஷ மொத்த வியாபார மதிப்பானது 5,000 ரூபாய்க்குக் குறைவாயிருக்கிறதோ அந்தக் கம்பெனிகளுக்கு கம்பெனி வரி விதிக்கக்கூடாது.

(2) ஷை வரியானது-78-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மியுனிஸிபல் கௌன்ஸிலார் நிச்சயிக்கக்கூடிய மொத்த வியாபார மதிப்பில் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இரண்டணவுக்கு மேற்படாமல், அந்த வியாபார மதிப்பில் நூற்றுக்கு இவ்வளவென்று கணக்கிட்டு விதிக்கப்படவேண்டும்.

(3) மொத்த ‘வியாபார மதிப்பு’ என்பது - யாதொரு கம்பெனியாரால் விற்பனை செய்யப்பட்டாவது வாங்கப்பட்டாவது உண்டாக்கப்பட்டாவது தயார் செய்யப்பட்டாவதிருக்கும் சாமான்கள் அல்லது அவர்களால் செய்யப்பட்ட வேறே வியாபாரம் அல்லது வேலையின் மொத்த பணமதிப்பு என்று அர்த்தமாகும்.

(4) வசூலிக்கப்பட்ட ப்ரிமியம் தொகையானது யாதொரு இன்ஷூரன்ஸ் கம்பெனியின் விஷயத்தில் மொத்த வியாபார மதிப்பாயிருப்பதாகக் கருதப்படும்.

விவரணம்.—ஏஜென்ட் யாதொரு கம்பெனியாயிருந்தால், அந்த ஏஜென்ட் - பிரதான கம்பெனியின் வியாபார மதிப்பாயிருக்கும் மதிப்பின் மேலேயே பிரத்தியேகமாய் கம்பெனி வரி விதிக்கப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.”

41. ஷை ஆக்ட் 93-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

“93 (1) தொழில் வரி விதிக்கப்படுமென்று அக்கிராசனாதிபதியானவர் 80-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரித்தால், மியுனிஸிபிடிக்குள்ளும் ஷை விளம்பரத்தில குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பிறகும் யாதொரு நபர் யாதொரு அரை வருஷத்தில் மொத்தத்தில் அறுபது தினங்களுக்கு யாதொரு தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்தாலும் செய்திருந்தாலும், யாதொரு வியாபாரம் நடத்தினாலும் நடத்தியிருந்தாலும், ஸர்க்காரைச் சேர்ந்ததாகவோ ஸர்க்கார் சம்பந்தமில்லாததாகவோவுள்ள யாதொரு உத்தியோகம் வகித்தாலும் வகித்திருந்தாலும், அல்லது யாதொரு பென்ஷனாவது ஈடுகளின்மேல் போட்டு வைத்திருக்கும் பணத்திலிருந்து வரும்படியாவது பெற்று யாதொரு அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினங்கள் மியுனிஸிபாலிடியில் வாசம் செய்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் 4-வது ஷெட்யூலிற்கண்ட நிபந்தனைகளின்படி தம்முடைய வரும்படியின்மேல் அரை வருஷ வரி செலுத்தவேண்டும்.

(2) யாதொரு நபர் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சகல ஆதாரங்களிலிருந்தும் தமக்குக்குக் கிடைக்கிற மொத்த வரும்படிக்குப் பொருத்தமாயுள்ள வகுப்பின்படி வரிக்குள்ளாகத்தக்கவராவார்.

(3) யாதொரு நபர் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள வேறே யாதொரு மியுனிஸிபாலிடியிலாவது லோகல் போர்டிலாவது கன்டோன்மென்டிலாவது அதே அரை வருஷத்துக்காக இந்த ஆக்டின்படியோ அல்லது 1919-ம்௵த்திய சென்னைராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியோ 1920-ம்௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படியோ விதிக்கப்பட்ட தொழில்வரிக்காகவாகிலும் 1910-ம்௵த்திய இந்துதேசத்து கன்டோன்மென்டுகளாக்டின்படி விதிக்கப்பட்ட தொழில் வரியைப் போன்ற வேறே யாதொரு வரிக்காகவாகிலும் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தியிருப்பதாக ருஜு செய்தால், அவர் - உத்தியோகம், வாசஸ்தலம் அல்லது வியாபாரஸ்தலம் மாறும் காரணத்தினாலேயே ஷை தொகைக்கும் இந்த ஆக்டின்படியாயினும் மேலே சொல்லப்பட்ட ஆக்டுகளில் எதன்படியாயினும் அந்த அரை வருஷத்துக்குத் தொழில் வரியாய்ச் செலுத்த அவர் மற்றப்படி உட்பட்டிருக்கும் தொகைக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டிலும் அதிகமாக எந்த மியுனிஸிபல் கௌன்ஸில், லோகல்போர்ட் அல்லது கன்டோன்மென்டுக்கும் செலுத்த உட்பட்டவராகமாட்டார்.

(4) யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலார் கம்பெனி வரி விதிக்காமல் தொழில் வரி மாத்திரம் விதித்தால், சகல கம்பெனிகளும் தொழில் வரிக்கு உள்ளானவையாகும்; யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலார் கம்பெனி வரி, தொழில்வரி ஆகிய இவ்விரண்டும் விதித்தால், கம்பெனி வரி செலுத்துவதற்குட்பட்டிராத கம்பெனிகள் - இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகும்; மேலும், கம்பெனி வரி செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும் கம்பெனிகள் தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகமாட்டா.”

42. ஷை ஆக்ட் 95-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

“95. யாதொரு அரை வருஷத்தில் கம்பெனி வரி செலுத்துவதற்குட்பட்ட யாதொரு கம்பெனி விஷயமாகவாவது தொழில் வரி செலுத்துவதற்குட்பட்ட யாதொரு நபர் விஷயமாகவாவது சேரவேண்டியதாயிருக்கும் வரி செலுத்தப்படாவிட்டால், அக்கிராசனாதிபதியானவர் - அந்த கம்பெனிக்காகிலும் நபருக்காகிலும் ஒரு நோடிஸ் சேர்ப்பிக்கச் செய்து, அந்தப்படி சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அந்த வரி செலுத்தவேண்டுமென்று அதில் காணவேண்டும்.”

43. ஷை ஆக்ட் 98-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், ‘அரை வருஷத்தவணைகளாக’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘அரைவருஷத்துக் கொருமுறை’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

44. ஷை ஆக்ட் 105-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அரை வருஷத் தவணைகளாக' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அரை வருஷத்துக்கொரு முறை' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

45. ஷை ஆக்ட் 110-வது பிரிவுடன் சேர்த்திருக்கும் விலக்கு நிபந்தனையோடு அடியிற் கண்டதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

"(f) இந்திய (ஆக்ஸிலியரி) உதவிப்படையையாவது இந்திய ஸ்தலப்படையை யாவது சேர்ந்த ஒருவர் யூனிபாரம் என்னும் உடை தரித்துக்கொண்டு அலுவலின்மே லிருக்கும் காலங்களிலாவது அலுவலுக்குப்போகும் அல்லது அலுவலிலிருந்து திரும்பி வரும் காலங்களிலாவது அவரை ஏற்றிக்கொண்டுபோகற."

46. ஷை ஆக்ட் 111-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற் கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"ஆனால்,—

(a) சேர்ந்தாற்போலிருக்கும் மியுனிஸிபாலிடிகளுக்கு மத்தியிலுள்ள எல்லையின் மேல் சுங்கக் கிராதிகளையாவது சுங்கச் சாவடிகளையாவது கட்டக்கூடாது ; மேலும்,

(b) பிரதேச கவர்ன்மெண்டார் - பொதுவாகவாவது குறித்த யாதொரு விஷயத்தி லாவது சுங்கக் கிராதிகள் சுங்கச் சாவடிகள் ஆகிய இவைகளின் சங்கியையையும் ஸ்தானங் களையும் ஒழுங்குபடுத்துவதற்காகவும், அக்கம்பக்கத்தில் இருக்கிற பிரதேச அதிகார சபை களின் விஷயத்தில் இன்ன பிரதேச அதிகார சபைகள குறித்த சுங்கச் சாவடிகளின் விசாரணை வகிக்கவேண்டுமென்பதையும் ஒரு பிரதேச அதிகார சபையாருக்கு அவர்களு டைய விசாரணையிலிருக்கும் ஒரு சுங்கச் சாவடி அல்லது பல சுங்கச் சாவடிகளிலிருந்து கிடைத்த வருமானத்தில் எவ்வளவை அக்கம்பக்கத்திலிருக்கும் வேறொரு பிரதேச அதிகார சபையாருக்குக் கொடுக்கவேண்டுமென்பதையும் நிச்சயிப்பதற்காகவும் தங்களுக்குத் தகுதி யாகத்தோற்றும் உத்தரவு பிறப்பிக்கலாம்."

47. ஷை ஆக்ட் 116-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

"116. (1) யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் சில வருஷங்களுக்கு ஒரு முறையாகவாவது ஒரே வருஷத்தில் ஒருமுறை அல்லது இரண்டுமுறை மாத்திரமே யாவது ஏற்படுகிறபட்சத்தில், யாதொரு மியுனிஸிபாலிடியையாகிலும் அதன் சமீபத்தி லுள்ள இடத்தையாகிலும் விட்டு ரெயில்மூலமாய் வெளியே போகும் நபர்களுக்கு மேலேகண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் விஷயமாயும் குறித்த யாதொரு கால அளவுக்கு மாத்திரம் ஒரு வரி விதிக்கவேண்டும். யாத்திரை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் இதை விட அடிக்கடி ஏற்படுவதாயிருந்தாலும், யாதொரு யாத்திரை ஸ்தலமானது ஜனங்கள் வருஷமுழுவதும் போகக்கூடிய ஸ்தலமாயிருந்தாலும், வருஷ முழுவதும் ஷை வரி விதிக்க லாம்.

(2) இன்ன சந்தர்ப்பத்திலும் இன்ன கால அளவுக்கும் ஷை வரி விதிக்கவேண்டு மென்பதை மியுனிஸிபல் கௌன்ஸிலார் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றும் சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களுடன் கலந்து ஆலோசித் தும் நிச்சயிக்கவேண்டும்.

(3) 79-வது பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியில் கண்டிருக்கும் வரி விதிக்கப்படுமென்று 80-வது பிரிவின்படி அக்கிராசனாதிபதி விளம்பரம் பிரசுரித்தால், அந்த வரியை - ஷை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்தும் கால அளவிலும் மியுனிஸிபாலிடியிலாவது அதன் சமீபத்திலாவதுள்ளவையும ஷை விளம்பரத்தில் சொல் லப்பட்டிருப்பவையுமான ரெயில்வே ஸ்டேஷன்களில் எதை விட்டாகிலும் ரெயில்மூல மாய் யாத்திரை ஸ்தலத்திலிருந்து குறிப்பிடப்பட்டதற்கு அதிகமான தூரத்தில் இருக்கிற வேறே யாதொரு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பிரயாணம் செய்யும் சகல பிரயாணிகளின் டிக்கட்டுகளின்மேலும் உடன் சேர்க்கையான கட்டணமாக வசூலிக்கவேண்டும்.

(4) ஒவ்வொரு வகுப்பு டிக்கெட்டின்பேரிலும் விதிக்கப்படவேண்டிய இந்த வரி யின் வீதங்களை மியுனிஸிபல் கௌன்ஸிலார் நிச்சயிக்கவேண்டும் ; ஆனால், அவை - பின் வரும் அட்டவணையில் கண்டிருக்கும் வீதங்களுக்கு மேற்படக்கூடாது :—

	வரி.					
	வரையறுக்கப்பட்ட கால அளவுகளுக்கு.			வருஷ முழுவதும்.		
(1)	(2)			(3)		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
முதல் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	8	0	0	4	0
இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	4	0	0	2	0
மத்திய வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	0	3	0	0	[illegible]	[illegible]
மூன்றும் வகுப்பு டிக்கெட்டுகளுக்கு	[illegible]	2	0	0	[illegible]	[illegible]

ஆனால், ஸீஸன் டிக்கெட் என்னும் குறித்த கால அளவுகளுக்கு ஒரே டிக்கெட்டாகக் கொடுககப்படும் டிக்கெட்டுகள் எவையேனும இருந்தால், அவைகளின் விஷயத்தில் விதிக்க வேண்டிய வீதங்களை, மியுனிஸிபல் கௌன்ஸிலார்-சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களோடு கலந்து ஆலோசித்து நிச்சயிககவேண்டும்; ஆனால், ஒரு மாதம் அல்லது அதற்குக் குறைந்த யாதொரு கால அளவுக்கு அந்த வீதங்கள் ஷை அட்டவணையின் (2) குறிப்பிட்ட கலத்தில் கண்டிருக்கும் வீதத்துக்கு ஆறு மடங்குக்கு அதிகப்படக்கூடாது.

(5) பிரதேச கவர்ன்மெண்டார் - (i) வரிவசூலிப்பதையும், (ii) அதை சம்பந்தப்பட்ட கௌன்ஸிலுக்குக் கொடுப்பதையும், (iii) அதை வசூலிடபதில ரெயிலவே பரிபாலகர்களால செய்யப்பட்ட எவையேனும் செலவுகளைக் கழித்துககொள்வதையும், (iv) வரி விதிப்பது, வசூலிப்பது அல்லது அதைப் பங்கீடுசெய்வதற்குச் சமபந்தப்பட்ட விஷயங்களில் (a) கௌனஸில்களுக்கும் இதர பிரதேச அதிகார சபைகளுக்கும், (b) ஆலோசனை சபையிலுள்ள கவானா ஜெனரல் அவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு கௌன்ஸிலகளுக்கும் ரெயில்வே ப்ரிபாலகர்களுக்கும் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானஞ் செய்வதையும் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக இந்த ஆகடுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத விதிகள் செய்யலாம்.''

48. ஷை ஆக்ட் 118-வது பிரிவின் கடைசியில் அடியிற்கண்ட வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

''கௌன்ஸிலுக்குச் சேரவேண்டிய இதர தொகைகளைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியுடன் கணக்கிலிருந்து அடித்துவிடலாம்.''

49. ஷை ஆக்ட் 154-வது, 155-வது பிரிவுகளையும், 158-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவையும், (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு முதலிலுள்ள ''(2)'' என்னும் இலக்கத்தையும் நகவளைவுக் குறிகளையும் அதனுடன் சேர்த்திருக்கும் விலக்கு நிபந்தனையையும் விட்டுவிடவேண்டும்.

50. ஷை ஆக்ட் 156-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

''156. யாதொரு மசூதியாவது கோயிலாவது மடமாவது மதஆராதனை அல்லது போதனைசெய்யும் வேறே இடமாவது யாதொரு மியுனிஸிபாலிடியின் எல்லைகளுக்குள்ளாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் இருந்து, வருஷ முழுவதிலுமோ குறித்த சில சந்தர்ப்பஙகளிலோ ஜனங்கள் விசேஷமாய் ஷை மசூதி முதலியவைகளுக்குப் போவதாயிருந்தால், பொது ஜனங்களின் தேகாரோக்கியம், பந்தோபஸ்து அல்லது சௌகரியத்துக்காக அவசியமான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட மியுனிஸிபல் கௌன்ஸிலார் செய்யவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட மசூதி, கோயில் அல்லது மடத்தின் மேல்விசாரணையாவது மத ஆராதனை அல்லது போதனை செய்வதற்கான வேறே யாதொரு இடத்தின் மேல்விசாரணையாவது வகிக்கும் ட்ரஸ்டி அல்லது இதர நபர் மியுனிஸிபல் கௌன்ஸிலின் நிதிக்குப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிச்யிக்கபபடக்கூடியபடி மீண்டும் மீண்டும் கொடுக்கப்படத்தக்க அல்லது ஒரே தடவையாய்க் கொடுக்கப்படத்தக்க சகாயத்தொகைகள் கொடுக்கவேண்டுமென்று ஷை கௌன்ஸிலார் உத்தரவுசெய்யலாம்.''

51. அடியிற்கண்டதை ஷை ஆக்ட் 162 வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவாக அமைத்துககொண்டு, இப்போதிருக்கும் பிரிவுக்கு (1) குறிபிட்ட உட்பிரிவென்று இலக்கமிடவேண்டும :—

''(2) கௌன்ஸிலார் - வேறே யாதொரு பிரதேச அதிகார சபையின் சம்மதத்தைப்பெற்று, யாதொரு பொதுத் தெருவின் அல்லது அதன் யாதொரு பாகத்தின் பராமரிப்பை அந்த அதிகார சபையாரிடத்தில் ஒப்புவிக்கலாம்; அந்தப்படி பராமரிப்பதற்குப் பிடிக்கும் செலவுக்காக கௌன்ஸிலார் ஏற்பாடு செய்யவேண்டும்.''

52. ஷை ஆக்ட் 183-வது பிரிவைச் சேர்ந்த (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

''(2) அக்கிராசனாதிபதியானவர் - கௌன்ஸிலாரிடத்தில் சங்கிரமித்திருக்கும்யாதொரு பொதுவான தெருவிலாவது வேறே எந்த பொதுவான இடத்தின் மேல்விசாரணை அந்தக் கௌன்ஸிலாரிடத்தில் சஙகிரமித்திருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு இடத்திலாவது பந்தல்களையும் இதர கட்டுக்கோப்புகளையும் சிறிதுகாலத்துக்கு அமைத்துக்கொள்வதற்காகத் தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் நிர்பந்தங்களுக்கும் உட்படுத்தி லைஸென்ஸ் கொடுக்கலாம்.

(3) கௌன்ஸிலார் - தங்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் பாட்டையின் பக்கங்களையும் தெருக்களின் ஓரங்களையும் கௌன்ஸிலாரால் நிஷகரிஷை செய்யப்படக்கூடிய ஷரத்துகளின்படியும் திட்டங்களின்படியும் கால அளவுக்கும் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காக குத்தகைக்கு விட அதிகாரம் உடையவர்களாவார்கள்.

(4) ஆனால், ஷை பிதுக்கத்தினாலாகிலும் மேலேகண்டபடி (பந்தல் முதலியவைகளை) அமைத்துக்கொள்வதனாலாகிலும் அனுபோகத்தில் வைத்துக்கொள்வதனாலாகிலும் வெகுசாய் தேகாரோக்கியத்துக்குக் கெடுதி உண்டாகக்கூடியதாயிருந்தாலும் பொது ஜன அசௌகரியம் உண்டாகக்கூடியதாயிருந்தாலும், அந்த பாட்டையை அப்படியே உபயோகிப்பதற்கு வேறே விதமாய் முக்கியாமசத்தில் இடைஞ்சல் உண்டாகக்கூடியதாயிருந்தாலும், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி லைசென்ஸ கொடுக்கவுங்கூடாது, (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு குத்தகைக்கு விடவுங்கூடாது.

(5) பொதுவாய் மியுனிஸிபல் கௌன்ஸில்களாவது குறித்த யாதொரு மியுனிஸிபல் கௌஸ்ஸிலாவது (1), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துவது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் - விளம்பரமூலமாக நிர்ப்பந்தம் ஏற்படுத்தி அதைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி மேல்விசாரணையின்கீழ் வைக்கலாம்.

(6) இந்தப் பிரிவின்படி எவ்வளவு காலத்துக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காலம் கழிந்துபோவதன்மேல், அக்கிராசனாதிபதியானவர் - (1) குறிப்பிட்ட உட்பிரிவு அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட யாதொரு பிதுக்கம் அல்லது கட்டுக்கோப்பை நோடிஸ் கொடுக்காமலே எடுத்துவிடும்படிச் செய்யலாம் ; மேலும், அந்தபபடி செய்வதற்குப் பிடிக்கும் செலவானது - லைசென்ஸ் கொடுக்கப்பெற்ற நபரிடமிருந்து 344-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறமாதிரியாய் வசூலிக்கத்தக்கதாகும்.''

53. ஷை ஆக்ட் 199-வது பிரிவுடன் அடியிற்கண்ட விவரணத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

'' **விவரணம்.**—இந்தப் பிரிவிலே 'கட்டிடம்' என்பதில், எவ்வளவு உயரம் உள்ளதாயிருந்தாலுஞ்சரி யாதொரு பொதுத் தெருவுக்கு எல்லையாகவாவது அதைச் சார்ந்ததாகவாவதிருக்கும் யாதொரு சுவர் அல்லது அடைப்பு என்பதும் அடங்கும்.''

54. ஷை ஆக்ட் 249-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட விலக்கு நிபந்தனைக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

ஆனால்,—

(a) அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் - அது பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபதுநாள்வரையில் செலாவணியாகமாட்டாது ; மேலும்,

(b) அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியுடனன்றி மற்றப்படி, மியுனிஸிபல் எல்லைகளுக்கு வெளியேயுள்ள யாதொரு விஸ்தீர்ணத்தில் செலவணியாகமாட்டாது.

55. ஷை ஆக்ட் 255-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'யாதொரு இடத்துக்காகிலும் மியுனிஸிபாலிடிக்குள் சாப்பிடப்போகும் ஆகாரத்துக்காக உத்தேசிக்கப்பட்ட பிராணிகளைக் கொல்வதற்காக மியுனிஸிபல் எல்லைகளிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள்ளாக ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியாய் உபயோகிக்கப்படுகிற யாதொரு இடத்துக்காகிலும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யாதொரு இடத்துக்கு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பிரிவை அமைத்துக்கொண்டு, இப்போதிருக்கும் (2) குறிபபிட்ட உட்பிரிவுக்கு (3) என்று மறுபடியும் இலக்கமிடவேண்டும் :—

'' (2) பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியைப் பெற்று மியுனிஸிபல் கௌன்ஸிலார் - மியுனிஸிபாலிடிக்குள் சாப்பிடப்போகும் ஆகாரத்துக்காக உத்தேசிக்கப்பட்ட பிராணிகளைக் கொல்வதற்காக மியுனிஸிபல் எல்லைகளிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள்ளாக ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியாய் உபயோகிக்கப்படுகிற யாதொரு இடத்தின் சொந்தக்காரருக்கு இதுவிஷயமாய் நோடிஸ் வரப்பெற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளும் அதற்குப் பிறகு ஒவ்வொரு வருஷத்திலும் முதல் மாதத்திலும் லைசென்ஸ் பெறவேண்டுமென்று உத்தரவுபண்ணலாம்.''

56. ஷை ஆக்ட் 259-வது பிரிவில், 'கட்டப்பட்ட' என்னும் வார்த்தைக்கு முன் 'அடையப்பட்ட' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும.

57. 260-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

'' (2) கௌன்ஸிலார் - யாதொரு பொது மார்க்கெட்டில், தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய வீதங்களின்படி அடியிறகண்ட கட்டணங்களில் யாதொன்றையாகிலும் பலவற்றையாகிலும் விதித்து, அந்தக் கட்டணங்களை வசூலிக்கும் வேலையைத் தங்களுக்

குத் தகுதியாகத் தோற்றக்கூடிய நபர்களின் நிர்வாகத்தில் விடலாம் ; அல்லது, தங்களுக் தகுதியாகத் தோற்றக்கூடிய ஷரத்துகளின்படியும் திட்டங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட கட்டணங்களை இஜாராவிடலாம் :—

(a) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளை உபயோகிப்பதற்காக அலலது அவைகளில் விற்பனையின்பொருட்டு வஸ்துக்களைக் காட்டிவைப்பதற்கான சுதந்தரத்துக்காக கட்டணங்கள் ;

(b) அந்த மார்க்கெட்டுகளிலுள்ள கடைகளை அல்லது கொட்டில்களை அல்லது பட்டிகளை அல்லது நிலைகளை உபயோகிப்பதற்காக கட்டணங்கள் ;

(c) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளில் விற்பனைக்காக சரக்குகளைக் கொண்டுவருகிற வண்டிகளுக்கு அல்லது பொதி ஜந்துக்களுக்கு அல்லது ஷை சரக்குகளைத் தூக்கிக் கொண்டுவருகிற நபர்களுக்குக் கட்டணங்கள் ;

(d) அந்த மார்க்கெட்டுகளுக்குள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிற அல்லது அந்த மார்க்கெட்டுகளில் விற்கப்படுகிற பிராணிகளுக்குக் கட்டணங்கள் ;

(e) அந்த மார்க்கெட்டுகளில் தொழில் நடத்திக்கொண்டுவருகிற ப்ரோக்கர்களுக்கும், கம்மிஷன் ஏஜெண்டுகளுக்கும், எடை போடுகிறவர்களுக்கும், அளப்பவர்களுக்கும் லைஸென்ஸ் கட்டணங்கள்.''

58. ஷை ஆக்ட் 261-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"261-A இந்தப் பிரிவு செலாவணியாகத் தொடங்கினபிறகு எந்த நபரும் - சொந்த (ப்ரைவேட்) மார்க்கெட்டைப் புதிதாய் ஏற்படுத்தவுங்கூடாது திறந்துவைத்திருக்கவுங் கூடாது."

59. ஷை ஆக்ட் 262-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

"262 (1) யாதொரு நபர் - 261-A பிரிவு செலாவணியாகத் தொடங்குவதற்கு முன் சட்டப்படி ஏற்பட்டிருக்கும் சொந்த மார்க்கெட்டை திறந்துவைத்திருப்பதற்கு மியுனிஸிபல் கௌன்ஸிலாரிடமிருந்து பிரதி வருஷமும் லைஸென்ஸ் பெற்றாலன்றி மற்றப்படி, ஷை மார்க்கெட்டை அந்தப்படி திறந்துவைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட லைஸென்ஸ் வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தை, அந்த சொந்த மார்க்கெட்டுக்குரியவர் - எந்த வருஷத்துக்கு லைஸென்ஸ் வேண்டியிருக்கிறதோ அந்த வருஷ ஆரம்பத்திற்கு ஆறு வாரத்திற்குக் குறையாமல் முன்னதாகச் செய்துகொள்ளவேண்டும்.

(3) மியுனிஸிபல் கௌன்ஸிலார் - அப்படிப்பட்ட மார்கெட்டில் மேல்விசாரணை செய்வது விஷயமாகவும் பார்வையிடுவது விஷயமாகவும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ரெகுலேஷன்களுக்கும், சுகாதாரம் - ஜலதாரை ஏற்பாடு - ஜலசர்ப்பரா - பாதைகள் வழிகள் ஆகிய இவைகளின் அகலம் - உபயோகிக்கவேண்டிய எடுத்தலளவைகள் முகத்தலளவைகள் - வாங்கவேண்டிய கட்டணங்கள், ஆகிய இவைகள் விஷயமாய்த் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் உட்பட்டு, மேலே கண்டபடி விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட லைஸென்ஸ் கொடுக்கவேண்டும். ஆயினும், மியுனிஸிபல் கௌன்ஸிலார் - அந்த லைஸென்ஸில் கண்ட திட்டங்களை எவராகிலும் மீறிநடந்தால், இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு லைஸென்ஸை எப்போதாகிலும் செலாவணியாகவொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம். மேலும், அவர்கள் - லைஸென்ஸில் கண்ட திட்டங்களைத் திருத்தி குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து செலாவணியாகும்படிச் செய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்படி யாதொரு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டாலும் செலாவணியாகவொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டாலும் ரத்துசெய்யப்பட்டாலும் திருத்தப்பட்டாலும், மியுனிஸிபல் கௌன்ஸிலார் - அந்தப்படி (லைஸென்ஸைக்) கொடுத்ததைக் குறித்தாவது நிறுத்திவைத்திருப்பதைக் குறித்தாவது ரத்துசெய்வதைக் குறித்தாவது திருத்தியதைக் குறித்தாவது ஒரு நோடிஸை இங்கிலிஷிலும் ஒரு சுதேச பாஷையிலும், எதற்காக லைஸென்ஸ் கேட்கப்பட்டதோ அந்த இடத்தின் பிரவேசவாயிலிலாகிலும் அதற்கு சமீபத்திலாகிலும் எல்லாருக்கும் தெரியும்படியான யாதொரு இடத்திலே ஒட்டிவைக்கும்படிச் செய்யவேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு லைஸென்ஸும் - எந்த வருஷத்துக்காக அது கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த வருஷத்தின் கடைசியில் முடிவாய்ப் போகும்."

60. ஷை ஆக்ட் 262-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"262-A. 262-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட லைஸென்ஸின்பிரகாரம் 260-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் தன்மையுள்ள கட்ட

ணங்களை விதித்து வாங்குவதற்கு அனுமதி ஏற்பட்டிருந்தால், மியுனிஸிபல் கௌன்ஸிலார் - ஷை லைஸென்ஸுக்காக, பிரஸ்தாப மார்க்கெட்டிலிருந்து முந்திய வருஷத்தில் கிடைத்த மொத்த வரும்படியில் நூற்றில் பதினைந்து வீதத்துக்கு மேற்படாமல் கட்டணம் விதிக்கலாம்.''

61. ஷை ஆக்ட் 267-வது பிரிவில், 'திறந்துவைக்கப்பட்டிருக்கிறதோ' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'எது இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அல்லது திறந்துவைக்கப்பட்டிருக்கிறதோ' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

62. ஷை ஆக்ட் 267-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

''267-A. (1) யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலார் - எந்த இடத்திலாகிலும் சொந்த மார்க்கெட் வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வசூல் செய்யவும் யாதொரு நபருக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக்கொள்ளலாம். 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டின்படி மேலே கண்ட பாத்தியதைகள் எடுத்துக்கொள்ளப்படுவதுமல்லாமல், அந்த பாத்தியதைகள் ஷை ஆக்டின் காரியங்களுக்காக நிலமாயிருப்பதாகவும் எண்ணப்படும்.

(2) அந்த சொத்தின் விஷயமாய் மேலே கண்டிருக்கும் ஆக்டின்படி தீர்மானிக்கப்படும் பிரதிபலன் தொகையையும் அதை எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் பிடித்த வேறே யாதொரு செலவுத் தொகையையும் மியுனிஸிபல் கௌன்ஸிலார் செலுத்துவதன் மேல், சொந்த மார்க்கெட் வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வசூல் செய்யவும் ஷை நபருக்குள்ள பாத்தியதைகள் மியுனிஸிபல் கௌன்ஸிலாரிடத்தில் சங்கிரமிக்கும்.''

63. ஷை ஆக்ட் 270-வது பிரிவில், 'வஸ்துக்களையேனும்' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'பிராணிகளையேனும்' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

64. ஷை ஆக்ட் 270-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவுகளைச் சேர்த்துக்கொண்டு, ஷை ஆக்ட் 248-வது பிரிவை விட்டுவிடவேண்டும் :—

பாரவண்டி நிற்கும் இடங்கள்.

''270-A. (1) மியுனிஸிபல் கௌன்ஸிலார் - பொதுவான இறங்கும் இடங்களையும், தங்குமிடங்களையும், பாரவண்டி நிற்கும் இடங்களையும் கட்டலாம் அல்லது ஏற்படுத்தலாம்; மேலும், அவர்கள் - அவைகளை உபயோகிப்பதற்காக கட்டணங்கள் விதித்து வாங்கலாம்.

(2) அந்த இடத்தை உபயோகிப்பதற்காக கௌன்ஸிலாரால் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களைக்குறித்த ஒரு ஸ்டேட்மென்டை இங்க்லிஷிலும் ஒரு சுதேச பாஷையிலும் அப்படிப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் எல்லாருக்கும் தெரியும்படியான பாகத்தில் காட்டிவைக்கவேண்டும்.

விவரணம்.—இந்த ஆக்டின் காரியங்களுக்காக, பாரவண்டி நிற்கும் இடம் என்பதில் வண்டிகளும் பிராணிகளும் நிற்பதற்கான இடம் என்பதும் அடங்கும்.

270-B. யாதொரு பொதுவான இறங்கும் இடத்தையாவது தங்கும் இடத்தையாவது பாரவண்டி நிற்கும் இடத்தையாவது மியுனிஸிபல் கௌன்ஸிலார் ஏற்படுத்தியிருந்தால், அக்கிராசனாதிபதியானவர் - அதிலிருந்து மியுனிஸிபல் கௌன்ஸிலாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய தூரத்துக்குள்ளாகவுள்ள யாதொரு பொதுவான இடத்தையாகிலும் யாதொரு பொதுவான பாட்டையின் பக்கங்களையாகிலும் எவரும் அதே காரியத்துக்காக உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம்.

270-C. இந்தப் பிரிவு செலாவணியாகத் தொடங்கின பிறகு எந்த நபரும்-பாரவண்டி நிற்கும் இடத்தை சொந்தத்தில் புதிதாய் ஏற்படுத்தவுங்கூடாது, திறந்து வைத்திருக்கவுங்கூடாது.

270-D. (1) 270-C பிரிவு செலாவணியாகத் தொடங்குவதற்குமுன் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாரவண்டி நிற்கும் சொந்த இடம் எதையும் திறந்துவைத்துக்கொண்டிருக்க யாதொரு நபர் மியுனிஸிபல் கௌன்ஸிலாரிடத்திலிருந்து பிரதி வருஷமும் லைஸென்ஸ் பெற்றன்றி மற்றப்படி, அவர்-ஷை இடத்தைத் திறந்து வைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட லைஸென்ஸ் எந்த வருஷத்துக்கு வேண்டியிருக்கிறதோ அந்த வருஷம் ஆரம்பிப்பதற்கு முன்னே ஆறு வாரத்துக்குக் குறையாமல் முன்னதாக, பாரவண்டி நிற்கும் சொந்த இடத்துக்குரியவர் அந்த லைஸென்ஸ் வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

(3) மேல்விசாரணை செய்வது சம்பந்தமாகவும் பரிசோதனை செய்வது சம்பந்தமாக வும் மியுனிஸிபல் கௌன்ஸிலாருக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ரெகுலேஷன்களுக் கும் குப்பை முதலியது இல்லாமல் சுத்தமாய் வைத்திருப்பது விஷயமாக மியுனிஸிபல் கௌன்ஸிலாருக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்கும் உட்படுத்தி அவர்கள் ஷை லைஸென்ஸ் கொடுக்கவேண்டும்.

(4) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு லைஸென்ஸுக்கும் மியுனிஸி பல் கௌன்ஸிலார் - வருஷம் ஒன்றுக்கு முந்நூறு ரூபாய்க்கு மேற்படாத கட்டணமும் விதித்து வாங்கலாம்.''

65. ஷை ஆக்ட் 286-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'அப்படி' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'ஜனனங்களையும் மரணங்களையுங்குறித்த சங்கதி தெரிவிக்கப்படவேண்டும்; மேலும், அவைகளை' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

66. ஷை ஆக்ட் 300-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'நிர்ணயிக் கப்படும் அளவுக்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'நிர்ணயிக்கப்படக்கூடிய நபர்கள் விஷயத்திலும் அளவுக்கும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

67. ஷை ஆக்ட் 303-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் அடியிற் கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (b) அடையாளமிட்ட பகுதியில், 'கௌன்ஸிலர்களின்' என்னும் வார்த்தைக்கு முன் 'அக்கிராசனதிபதி, உபஅக்கிராசனதிபதி அல்லது' என்னும் வார்த்தைகளை அமைத் துக்கொள்ளவேண்டும்.

(b) (c) அடையாளமிட்ட பகுதியை விட்டுவிடவேண்டும்.

(c) (e) அடையாளமிட்ட பகுதியில், 'சகாயநிதிகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவதைக் குறித்தும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'சகாயநிதிகளில் வேலை நடத்துவதைக் குறித்தும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(d) (h) அடையாளமிட்ட பகுதியில் 'கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள் அல் லது ஸானிடரி போர்ட் என்னும் சுகாதார சங்கத்துக்குள்ள' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அல்லது கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்குள்ள' என்னும் வார்த்தை களை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(e) (o) அடையாளமிட்ட பகுதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும்:—

''(o) கம்பெனி வரியிலிருந்தும், தொழில் வரியிலிருந்தும, வண்டிகள் பிராணி கள் இவைகளுக்கு விதிக்கும் வரியிலிருந்தும, சுங்கத்திலிருந்தும கிடைக்கும் வரும்படியை சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள பிரதேச அதிகார சபைகள் தங்களுக்குள் பங் கிட்டுக்கொள்வதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதைக் குறித்தும்.''

(f) (p) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதிகளை அமைத்துக் கொள்ளவேண்டும்:—

''(q) யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலின் ஜாரி செய்யப்பட்ட பட்ஜெட்டில் பதிந்திருக்கும் பங்கிடுத் தொகைகளை ஒரு தலைப்பிலிருந்து மற்றொரு தலைப்புக்கு ட்ரான்ஸ் பர் செய்வதைக் குறித்தும்;

(r) கம்பெனி வரி விதிக்கும் காரியங்களுக்காக கம்பெனிகளின் மொத்த வியா பார மதிப்பை இன்ன கோட்பாடுகளின்படி நிச்சயிக்கவேண்டுமென்பதைக் குறித்தும;

(s) ஆடிட்டர்கள், பரிசோதனை செய்வதற்கும் பார்வையிடுவதற்குமான உத்தி யோகஸ்தர்கள், விசாரணைகள் நடத்தவும் தஸ்தவேஜுகளை ஹாஜர்ப்படுத்தும்படி நிர்ப்பந் தப்படுத்த சாட்சிகளுக்கு ஸம்மன் அனுப்பி பரிசீலனை செய்வதற்கும் அதிகாரம் கொடுக் கப்பெற்றுள்ள உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களைக் குறித்தும், தணி க்கை செய்வது, பரிசோதனை செய்வது, மேற்பார்வையிடுவது ஆகிய இவைகளுக்குச் சம் பந்தப்பட்ட சகல விஷயங்களைக் குறித்தும்.''

68. ஷை ஆக்ட் 304-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் '2-வது ஷெட்யூல் அல்லது 5-வது ஷெட்யூல் அல்லது 6-வது ஷெட்யூலையாவது 4-வது ஷெட்யூலின் 2-ம் பாகத்தையாவது' என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும பர்த்தியாக, '1-வது, 7-வது, 8-வது ஷெட்யூல் களைத்தவிர இந்த ஆக்டுடன சேர்த்துள்ள இதர ஷெட்யூல்களில் எதையாவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும் :—

"(3) இந்தப் பிரிவின்படி செய்ய உத்தேசிக்கும் விதிகளின் மசோதாவை சட்ட நிரூபண சபையாருக்குமுன் வைக்கவேண்டும் ; சட்ட நிரூபண சபையார் அந்த மசோதாவைத் திருத்தாமல் அல்லது அதில் யாதொன்றைச் சேர்க்காமலாவது திருத்தங்களுடன் அல்லது எவைகளையேனும் அதில் சேர்த்தாவது தீர்மானமூலமாய் அங்கீகரித்தாலொழிய, ஷை விதிகளைச் செய்யக்கூடாது ; ஆனால், அந்தப்படி அங்கீகாரம் கொடுக்கப்படுவதன் மேல், அந்த விதிகளை அங்கீகரிக்கப்பட்ட மாதிரியாய்ச் செய்யலாம் ; மேலும், அப்படிப்பட்ட விதிகளை அந்தப்படி செய்ததும், அவைகளைப் பிரசித்தம் செய்யவேண்டும் ; அதற்குப் பிறகு அவை பூர்த்தியாயச் செலாவணியாகி அமுலுக்கு வரும்."

69. ஷை ஆக்ட் 305-வது பிரிவில், '303-வது, 304-வது பிரிவுகளின்படி' என்னும் வார்த்தைகளும இலக்கங்களும வருகிற இரண்டு இடங்களிலும் '303-வது பிரிவின்படி' என்னும் வார்த்தையையும் இலக்கத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

70. ஷை ஆக்ட் 306-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும்:—

(a) (2) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்டதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும :—

"(2-a) இன்ன திட்டங்களின்படிக்கானல் நிலங்கள் வீடுகளைச் சேர்ந்தவையாகக் கருதப்படுமென்பதை நிச்சயிப்பதற்காக."

(b) (18) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட (b) குறிப்பிட்ட உட்பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பகுதியைச் சேர்த்துகொள்ளவேண்டும் ;—

"(c) மார்க்கெட்டுகளில் தொழில நடத்திக்கொண்டுவருகிற ப்ரோக்கர்களுக்கும் கம்மிஷன் ஏஜெண்டுகளுககும் எடை போடுகிறவர்களுக்கும் அளப்பவர்களுக்கும் லைஸென்ஸ் கொடுப்பதற்காகவும அவர்களை மேல்விசாரணை செய்வதற்காகவும்."

(c) (23) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியைச சேர்த்துக் கொள்ளவேண்டும :—

"(23-a) தாதிகளையும் மருத்துவச்சிகளையும் பழக்குவதற்காகவும் அவர்களுக்கு லைஸென்ஸ் கொடுப்பதற்காகவும்."

71. ஷை ஆக்ட் 309-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், 'செய்யப்பட்ட' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'செய்து பிரசித்தஞ்செய்யப்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

72. ஷை ஆக்ட் 321-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"(2) இந்த ஆக்டில் வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனைகண்டிருக்கிறபடிக்கு அல்லது அதன்படி நிர்ணயிக்கப்படக்கூடியபடிக்கன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட ஒவ்வொரு லைஸென்ஸ் அல்லது அனுமதிக்கும் மியுனிஸிபல் கௌன்ஸிலாரால் சிக்ஷகிரிஷை செய்யப்படக்கூடிய பரிமாணங்களை அனுசரித்தும், வீதங்களின்படியும் கட்டணங்கள் விதிக்கலாம்."

73. ஷை ஆக்ட் 328-வது பிரிவில், 'இந்த ஆக்டின்படி செய்யப்படுகிற பிரதி விளம்பரத்தையும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'பிரதேச கவன்மென்டாரால் வெளிவிடப்படுகிற விளம்பரமல்லாமல் இந்த ஆக்டின்படி செய்யப்படுகிற ஒவ்வொரு விளம்பரத்தையும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

74. ஷை ஆக்ட் 348-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக, அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"(2) இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின்படியாவது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட யாதொரு அபராதம், செலவு, வரி அல்லது இதர தொகையானது-அது அபராதமாயிருந்தால் எப்படியோ அப்படியே க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின்படி ஷை மாஜிஸ்ட்ரேட்டால் வசூலிக்கப்படத்தக்கதாகும் ; மேலும், அது-வசூலிக்கப்படுவதன்மேல், இந்த ஆக்டின் காரியங்களுக்காக உபயோகிக்கப்படும்படி மியுனிஸிபல் கௌன்ஸிலாருக்குக் கொடுத்துவிடப்படவேண்டும்."

75. ஷை ஆக்ட் 363-வது பிரிவில், 'யாதொன்றையாவது பலவற்றையாவது' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'யாதொன்றையும் அல்லது பலவற்றையும், 156-வது பிரிவின்படிக்கான சகாயத்தொகையின் மொத்தத்தை நிச்சயிக்கவோ அல்லது 303-வது, 304-வது பிரிவுகளின்படி விதிகள் செய்யவோவுள்ள அதிகாரத்தையும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

76. ஷை ஆக்ட் 368-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"369. (1) யாதொரு கௌன்ஸிலுக்கும் ஒரு கன்டோன்மென்ட் அல்லது பல கன்டோன்மென்டுகளுக்கும் அல்லது வேறே பிரதேச அதிகார சபை அல்லது சபைகளுக்கும் இந்த ஆக்டில் அல்லது வேறே யாதொரு ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி ஏற்படும் எவைபேனும் விஷயங்கள் சம்பந்தமாய் விவாதம் உண்டாயிருந்து, ஷை கௌன்ஸிலும் சம்பந்தப்பட்ட கன்டோன்மென்டும் அல்லது பிரதேச அதிகார சபையும் அல்லது கன்டோன்மென்ட் அல்லது பிரதேச அதிகார சபைகளும் அதைத் தங்களுக்குள்ளேயே சமாதானமாய்ப் பைசல்செய்துகொள்ளமுடியாதென்று பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் அந்த விவாதத்தைப்பற்றி விசாரித்து,

(a) அதைத் தாங்களே தீர்மானம் செய்யலாம் ; அல்லது,

(b) அதை தீர்மானம் செய்வதற்காக ஒரு மத்தியஸ்தருக்காகிலும் நபர்கள் சேர்ந்த ஒரு சபைக்காகிலும் அனுப்பலாம் ; அல்லது,

(c) அதைத் தீர்மானம் செய்வதற்காக 26-வது பிரிவின்படி ஒரு கூட்டுக்கம்மிட்டியை ஏற்படுத்தும்படி கட்டளையிடலாம்.

(2) (a) குறிப்பிட்ட பகுதியின்படி பிரதேச கவர்ன்மென்டாரின் தீர்மானமாவது, (b) குறிப்பிட்ட பகுதியின்படி மத்தியஸ்தர் அல்லது நபர்கள் சேர்ந்த சபையின் தீர்மானமாவது, (c) குறிப்பிட்ட பகுதியின்படி கூட்டுக்கம்மிட்டியின் தீர்மானமாவது முடிவானதாகும் ; மேலும், அது - விவாதம் செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு பிரதேச அதிகார சபையையும் கட்டுப்படுத்துவதாகும்."

77. ஷை ஆக்ட் 4-வது ஷெட்யூலிற்கண்ட 1 முதல் 19 வரையிலுள்ள விதிகளுக்கு பதிலாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

இந்த விதிகளிலே, 'வரி' என்பதில், யாதொரு வரிக்காக செய்துகொள்ளப்பட்ட ராஜி ஏற்பாட்டின்படி செலுத்தவேண்டிய பாக்கி என்பதும் அடங்கும்.

சாதாரணமாய் வரிகளுக்குப் பொதுவான நிபந்தனைகள்.

2. (1) அக்கிராசனாதிபதியானவர் - இந்த ஆக்டின்படி வரிக்குள்ளாகத்தக்க நபர்களையும் சொத்தையும் காட்டும்வரிவிதிப்பு புஸ்தகங்களை நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனாப்படி தயார் செய்து வைத்திருக்கவேண்டும்.

(2) வரிவிதிப்பு புஸ்தகங்களை வரி செலுத்தும் எந்த நபராகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜென்டாகிலும் நியாயமான எல்லாக் காலங்களிலும் கட்டணமில்லாமல் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

(3) கௌன்ஸிலாருடைய கணக்கு புஸ்தகங்களை வரி செலுத்தும் யாதொரு நபர் பார்வையிடவேண்டுமானால், ஒவ்வொரு மாதத்திலும் கௌன்ஸிலார் நிஷ்கரிஷைசெய்யும் தினத்திலாவது தினங்களிலாவது கட்டணமில்லாமலே அவர் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

3. இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அக்கிராசனாதிபதியானவர் - ஒவ்வொரு சொத்து அல்லது நபரும் இன்ன வரிக்கு உள்ளாகும் அல்லது உள்ளாவாரென்பதை நிச்சயிக்கவேண்டும் :

ஆனால், அக்கிராசனாதிபதி செலுத்தக்கூடிய வரிகளின் விஷயத்தில், ரெவினியு டிவிஷனல் ஆபீஸராவது ரெவினியு டிவிஷனல் ஆபீஸரே அக்கிராசனாதிபதியாகக்கூட இருந்தால் கௌன்ஸிலாராவது - பிரதமத்தில் வரி விதிக்கவேண்டும்.

4. (1) யாதொரு நபருக்காவது சொத்துக்காவது குறைவாக வரி விதிக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும், அந்த நபருடைய பெயர் அல்லது அந்த சொத்து அஜாக்கிரதையினாலாவது கிராமப்பிசகாயாவது யாதொரு வரிக்குச் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு புஸ்தகங்களிலிருந்து விட்டுவிடப்பட்டிருக்கிறதென்றாகிலும் எப்போதேனும் கௌன்ஸிலாருக்குத் தோற்றுமாகில், அவர்களுக்கு நியாயமென்று தோற்றுகிறவிதமாய் ஷை புஸ்தகங்களைத் திருத்தும்படி அவர்கள் அக்கிராசனாதிபதிக்குக் கட்டளையிடலாம் ; ஆனால், வரிவிதிப்பு புஸ்தகங்களை உத்தேசிக்கப்பட்ட பிரகாரம் ஏன் திருத்தக்கூடாதெனபதற்கு காரணங்காட்ட சம்பந்தப்பட்ட நபருக்கு நியாயமான அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, ஷை கட்டளை எதுவும் செய்யக்கூடாது.

(2) அந்தப்படி செய்யும் திருத்தமானது - அதைச் செய்வது நியாயமாகுமென்று சொல்வதற்குள்ள சந்தர்ப்பங்கள் நடைமுதல் அரைவருஷத்திலோ அதற்கு அடுத்து முந்திய அரை வருஷத்திலோ மிகவும் முற்பட்ட எந்த தேதியில் ஏற்பட்டிருந்தனவோ அந்த தேதியிலிருந்து செலாவணியாயிருப்பதாகக் கருதப்படும்.

5. (1) அக்கிராசனாதிபதியானவர் - யாதொரு வரியைச் செலுத்தும் பிரதி நபருக்கும் அதற்காகத் தாமாவது இது விஷயத்தில் தம்மால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது கையெழுத்துபண்ணி ரசீது ஒன்றைக் கொடுக்கவேண்டும்.

(3) அந்த ரசீதில்—

(a) அது கொடுக்கப்படும் தேதியையும்,

(b) அது யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த நபரின் பெயரையும்,

(c) எந்த வரியின் விஷயமாய்த் தொகை செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்த வரியையும்,

(d) எந்தக் கால அளவுக்கு தொகை செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவையும்,

(e) செலுத்தப்பட்ட தொகையையும்

கண்டெழுதவேண்டும்.

சொத்து வரி விதிப்பது.

6. சொத்து வரி விதிக்கும் காரியங்களுக்காக யாதொரு நிலம் அல்லது கட்டிடத்தின் மதிப்பானது - அந்த வரி அக்கிரசனாதிபதியால் செலுத்தப்படக்கூடியதாயிருக்கும் விஷயங்களிலன்றி மற்றப்படி, அக்கிராசனாதிபதியால் தீர்மானிக்கப்படும்.

7. அக்கிராசனாதியானவர் - தம்மால் தீர்மானிக்கப்பட்ட சகல நிலங்கள், கட்டிடங் ஆகிய இவைகளின வருஷவாரி வாடகை மதிப்பையும் அல்லது மூலதனமதிப்பையும் அவைகளின்மேல் செலுத்தத்தக்க வரியையும் இது விஷயத்துக்காக மியுனிஸிபல் ஆபிஸில் வைத்துவைக்கப்படும் வரி விதிப்பு புஸ்தகங்களில் பதிவு செய்யவேண்டும். வரி விதிக்கத்தக்க ஒவ்வொரு பாபத்தின் விஷயமாகவும் நிச்சயித்தறியக்கூடியமட்டில் அடியிற் கண்ட விவரங்களை ஷை புஸ்தகங்களில் எழுதிவைக்கவேண்டும் :—

(a) சொந்தக்காரரின் பெயர் ;

(b) அனுபோகதாரரின் பெயர் ;

(c) ஷை பாபத்துக்குப் பெயர் ஏதேனும் இருந்தால் அது ;

(d) அது யாதொரு வார்டிலும் தெருவிலும் இருந்தால் அந்த வார்டின் பெயரும் தெருவின் பெயரும், அதற்குக் கொடுத்திருக்கிற யாதொரு ஸர்வே நம்பரும் அல்லது இதர நம்பரும் ;

(e) சந்தர்ப்பத்துக்கேற்றபடி வருஷாந்த வாடகை மதிப்பு அல்லது மூலதன மதிப்பு ;

(f) செலுத்தத்தக்க வரித் தொகை.

8. (1) வரி விதிப்பு புஸ்தகங்களை, ஐந்து வருஷத்துக்கு ஒரு முறை அக்கிராசனாதிபதி முழுவதும் புனராலோசனை செய்து திருத்தவேண்டும்.

(2) அக்கிராசனாதிபதியானவர் - பொதுவாய்ப் புனராலோசனைபண்ணி செய்யும் யாதொரு திருத்தத்துக்கும மற்றொரு திருத்தத்துக்கும் இடையில், வரி விதிப்பு புஸ்தகங்களில் யாதொரு சொத்தைச் சேர்த்தோ, அவைகளிலிருந்து யாதொரு சொத்தை நீக்கியோ, அல்லது யாதொரு சொத்தின் மதிப்பையாவது வரித்தொகையையாவது மாற்றியோ அவைகளைத் திருத்தலாம். அந்தத் திருத்தமானது எந்த அரை வருஷத்தில் செய்யப்படுகிறதோ அந்த அரைவருஷ முதல் செலாவணியாகும்:

ஆனால், ஷை திருத்தமானது யாதொரு அரை வருஷத்துக்காக டிமாண்ட் நோடிஸ் பிறப்பிக்கப்பட்ட பிறகு அந்த அரை வருஷத்தில் செய்யப்பட்டால், அது - அடுத்துவரும் அரை வருஷத்திலிருந்து மாத்திரமே செலாவணியாகும்.

9. வரி விதிப்பு புஸ்தகங்கள் முதல்தடவையாய்த் தயார் செய்யப்பட்டு, அந்தப் புஸ்தகங்களைப் பொதுவாய்ப் புனராலோசனை செய்து திருத்தி யெழுதுவது முடிவாயிருக்கும் போதெல்லாம், அக்கிராசனாதிபதியானவர் - பஹிரங்கமாய் விளம்பரம் பிரசித்தம் செய்து, புனராலோசனை செய்யவேண்டுமென்று அனுப்பப்படும் மனுக்கள் அந்த விளம்பரத்தின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் மியுனிஸிபல் ஆபிஸில் வந்து சேர்ந்தால், அவைகளைப்பற்றி ஆலோசனை செய்யப்படுமென்று அதில் காணவேண்டும். அந்த விளம்பரத்தை மியுனிஸிபல் ஆபிஸின் விளம்பரப் பலகையில் ஒட்டவேண்டும்; மேலும், அதே தினத்தில் அதை தண்டோரா மூலமாய் மியுனிஸிபாலிடியில் பிரசித்தம் செய்யவேண்டும்.

10. பொதுவாய்ப் புனராலோசனைபண்ணி செய்யும் யாதொரு திருத்தத்துக்கும் மற்றொரு திருத்தத்துக்கும் இடையில், அக்கிராசனாதிபதி யாதொரு சொத்துக்கு முதல் தடவையாய் வரி விதிக்கிற ஒவ்வொரு விஷயத்திலும் அல்லது சொத்து வரி விதிக்கப்படக்கூடிய வீதத்தைப் பொதுவாக உயர்த்தியதன் காரணமாகவன்றி மற்றப்படி யாதொரு சொத்துக்குள்ள வரியை உயர்த்துகிற ஒவ்வொரு விஷயத்திலும், அக்கிராசனாதிபதியானவர் - அந்த சொத்தின் சொந்தக்காரருக்காவது அனுபோகதாரருக்காவது விசேஷ நோடிஸ் சேர்ப்பித்து, ஷை வரி விதிப்பைப்பற்றி புனராலோசனை செய்வதற்கான விண்ணப்பமானது அந்த நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் மியுனிஸிபல் ஆபிஸில் வந்துசேர்ந்தால் அதைப்பற்றி ஆலோசிக்கப்படுமென்று அந்த நோடிஸ் மூலமாய்த் தெரிவிக்கவேண்டும்.

11. யாதொரு வருஷம் முடிவதற்குமுன் முப்பது தினங்களுக்குக் குறையாத எந்த காலத்திலாவது, யாதொரு நபர் - எதன் விஷயமாய் வரி விதிக்கப்படுகிறதோ அந்த சொத்தின் வருஷாந்தர வாடகை மதிப்பு பொதுவாய வரி விதிக்கப்பட்டது முதற்கொண்டாவது வரி விதிப்பு புஸ்தகங்களை கடைசியாகப் பொதுவாய்த் திருத்தி யெழுதப்பட்டது முதற்கொண்டாவது குறைந்துவிட்டிருக்கிறதென்னும காரணத்தை முன்னிட்டு, வரப்போகிற வருஷத்துக்குத் தாம் செலுத்தவேண்டியதாயிருக்கிற வரியைக் குறைக்க வேண்டுமென்று புனராலோசனை மனுமூலமாய் அக்கிராசனாதிபதியைக் கேட்டுக்கொள்ளலாம்.

12. 9-வது விதியின்படிக்காவது 10-வது விதியின்படிக்காவது 11-வது விதியின்படிக்காவது செய்துகொள்ளப்பட்ட எந்த மனுவவையும், நேராகவாகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜென்டின் மூலமாகவாகிலும் ஹாஜராகி தாம் சொல்லிக்கொள்ளவேண்டிய விஷயங்களைச் சொல்லிக்கொள்ள மனுதாரருக்கு நியாயமான அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, பைசல் செய்யக்கூடாது.

13. புனராலோசனை மனுவைப் பைசல் செய்தானவுடனே, அக்கிராசனாதிபதியானவர் - அதன்மேல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மனுதாரருக்காவது அவருடைய அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜென்டுக்காவது வாய்மொழியாகவாகிலும் எழுத்து மூலமாகவாகிலும் தெரிவிப்பதுடன், புனராலோசனை செய்ததன்மேல் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தொகையைப் பதினைந்து தினங்களுக்குள்ளோ அல்லது அந்தத் தொகை இன்னும் செலுத்தத் தக்கதாயிராவிட்டால் அது எந்தத் தேதியில் செலுத்தத்தக்கதாகிறதோ அந்த தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள்ளோ செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடவும் வேண்டும் ; மேலும், அவசியமானால், அவர் - வரி விதிப்பு புஸ்தகங்களைத் திருத்தும்படிச் செய்யவும் வேண்டும்.

14. (1) யாதொரு மியுனிஸிபாலிடி ஏற்படுத்தப்படுவதன்மேல், வரி விதிப்புகள் - 80-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதிமுதல் செலாவணியாகும்.

(2) புனராலோசனை பண்ணி செய்த யாதொரு பொதுத் திருத்தமானது - 9-வது விதியின்படிக்கான நோடிஸ் எந்த அரை வருஷத்தில் பிரசித்தம் செய்யப்படுகிறதோ அந்த அரை வருஷத்தின் முதல் தினத்திலிருந்து செலாவணியாகும்.

(3) 13-வது விதியின்படியாவது 27-வது விதியின்படியாவது வரி விதிப்பு புஸ்தகங்களில் அக்கிராசனாதிபதியால் செய்யப்பட்ட எவையேனும் திருத்தங்களானவை - எந்த வரி விதிப்பைப் புனராலோசனை செய்ய உத்தேசிக்கப்பட்டதோ அல்லது எதன் விஷயமாய் அப்பீல் செய்துகொள்ளப்பட்டதோ அந்த வரி விதிப்பு எந்த அரை வருஷத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த அரை வருஷத்திலிருந்து செலாவணியாவதாகக் கருதப்படும.

விவரணம்.—புதிய வகையைச் சேர்ந்த சொத்து வரி விதிப்பதாகிலும் யாதொரு வகையைச் சேர்ந்த சொத்து வரி விதிக்கப்படக்கூடிய வீதத்தை உயர்த்துவதாகிலும் இந்த விதியின் தாற்பரியப்படி திருத்துவது அல்லது புனராலோசனை செய்வதாகாது ; மேலும், அது - வரி விதிப்பதற்காவது உயர்த்துவதற்காவது நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதியிலிருந்து செலாவணியாகும்.

15. 12-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, 14-விதியில் குறிப்பிடப்பட்ட தேதி அல்லது தினத்திலிருந்து முப்பது தினங்களுக்குள் முதல் தடவை வரியைச் செலுத்திவிடவேண்டும் :

ஆனால், யாதொரு கட்டிடமானது முதல் தடவையாகக் கட்டப்பட்டாவது புதுப்பிக்கப்பட்டாவதிருந்து, அதை (கட்டி) முடிக்கிறதோ அல்லது அதில் குடியேறுகிறதோ எது முன்னதாக சம்பவிக்கிறதோ அந்த தேதியானது யாதொரு அரை வருஷத்தின் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி வரியாகிலும் உயர்த்தப்பட்ட வரியாகிலும் அந்தக் கட்டிடத்துக்கு அந்த அரை வருஷத்துக்கு விதிக்கப்படமாட்டாது.

கம்பெனிகளுக்கு வரி விதிப்பது.

16. (1) அக்கிராசனாதிபதியானவர் - கம்பெனிகளுக்கு கம்பெனி வரி விதிக்கவேண்டும்.

(2) ஷை வரியானது - எந்த அரை வருஷத்துக்கு வரி விதிக்கப்படுகிறதோ அதற்கு அடுத்து முந்தியதாயுள்ள அரை வருஷத்தில் கம்பெனியின் மொத்த வியாபார மதிப்பை அனுசரித்து விதிக்கப்படவேண்டும். யாதொரு கம்பெனி அப்படிப்பட்ட முந்திய அரை வருஷ முழுவதிலும் மியுனிஸிபாலிடியில் வியாபாரம் நடத்தியிராவிட்டாலும், அப்படிப்பட்ட முந்திய அரை வருஷத்தின் மொத்த வியாபார மதிப்பை நிச்சயித்தறிய முடியாதென்று அக்கிராசனாதிபதி அபிப்பிராயப்பட்டாலும், எந்த அரை வருஷத்துக்காக வரி விதிக்கப்படுகிறதோ அந்த அரை வருஷத்தில் மொத்த வியாபார மதிப்பை அக்கிராசனாதிபதி உத்தேசமாய்க் கணக்கிட்டு அதை அனுசரித்து ஷை வரி விதிக்கவேண்டும்.

(3) 95-வது பிரிவின்படி நோடிஸாவது 29-வது விதியின்படி பில்லாவது சேர்ப்பிக்கப்பட்டிராத பட்சத்திலே, அக்கிராசனாதிபதியானவர் - (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தம்மால் விதிக்கப்பட்ட வரியைப் புனராலோசனை செய்து திருத்தவேண்டுமென்று தாம் தெரிந்து திருப்தியடைந்தால், அந்தப்படியே திருத்தலாம்; மேலும், வரி விதிக்கப்பெற்ற கம்பெனியார் விண்ணப்பம் செய்துகொண்டால், அவர் அந்தப்படியே திருத்த வேண்டும்.

தொழில் வரி விதிப்பது.

17. (1) தொழில் வரி விதிக்கும் காரியங்களுக்காக நபர்களை அடியிற்கண்ட வகுப்புகளாகப் பிரிக்கவேண்டும்; மேலும், ஒவ்வொரு வகுப்பாருக்கும் அடியிற்கண்டபடி உச்ச அரைவருஷ வரி விதிக்கத்தக்கதாகும்:—

வகுப்பு.	அரை வருஷ வரும்படித் தொகை.		உச்ச அரை வருஷ வரி. ரூ. அ. ப.
I	50,000 க்கு மேற்பட்டு	..	500 0 0
II	40,000 க்கு மேற்பட்டு	50,000 க்கு மேற்படாமல்	375 0 0
III	30,000 ,,	40,000 ,,	300 0 0
IV	18,000 ,,	30,000 ,,	225 0 0
V	12,000 ,,	18,000 ,,	135 0 0
VI	9,000 ,,	12,000 ,,	90 0 0
VII	6,000 ,,	9,000 ,,	60 0 0
VIII	4,200 ,,	6,000 ,,	35 0 0
IX	3,000 ,,	4,200 ,,	21 0 0
X	1,800 ,,	3,000 ,,	12 8 0
XI	1,200 ,,	1,800 ,,	6 0 0
XII	600 ,,	1,200 ,,	4 0 0
XIII	300 ,,	600 ,,	1 8 0
XIV	150 ,,	300 ,,	0 8 0

(2) (1) குறிப்பிட்ட உபவிதியில் குறிப்பிடப்பட்ட உச்ச தொகைக்கு உட்பட்டு ஒவ்வொரு வகுப்பாருக்கும் விதிக்கப்படத்தக்க வரியைக் கௌன்ஸிலார் நிச்சயிக்கவேண்டும்:

ஆனால், எந்த விஷயத்திலும் யாதொரு வகுப்பாருக்கு விதிக்கப்படும் வரிக்கும் அந்த வகுப்புக்கு ஏற்பட்ட உச்ச வரும்படிக்கும் உள்ள சங்கியாபரிமாணமானது - அதற்குக் கீழ்ப்பட்ட யாதொரு வகுப்பாருக்கு விதிக்கப்படும் வரிக்கும் அந்த வகுப்புக்கு ஏற்பட்ட உச்ச வரும்படிக்கும் உள்ள பரிமாணத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது.

(3) கௌன்ஸிலார் - (1) குறிப்பிட்ட உபவிதியில் கண்டிருக்கிற யாதொரு வகுப்பாரையாவது பலவகுப்பாரையாவது தொழில் வரிசெலுத்த உட்பட்டிருப்பதனின்றும் நிவாரணை செய்யலாம்: ஆனால், எந்த வகுப்பாரையும், ஷை வீத நிர்ணயத்தில் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாயுள்ள யாதொரு வகுப்பார் வரி செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும்போது, நிவாரணை செய்யக்கூடாது.

(4) அக்கிராசனாதிபதியானவர் - வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு நபருக்கும், அவருக்கு அரை வருஷத்தில் என்ன வரும்படி கிடைக்கிறதென்று தாம் அபிப்பிராயப்படுகிறாரோ அந்த வரும்படிக்கு ஏற்றபடி, வீத நிர்ணயத்தில் ஒரு வகுப்பு ஏற்படுத்தவேண்டும்; மேலும், 95-வது பிரிவின்படி நோடிஸாவது 29-வது விதியின்படி பில்லாவது சேர்ப்பிக்கப்பட்டிராதபட்சத்தில், அவர் - ஒரு வகுப்பில் தாம் சேர்த்த யாதொரு நபர் வேறொரு வகுப்பில் சேர்க்கப்படவேண்டுமென்று தாம் தெரிந்து திருப்தியடைந்தால், அந்தப்படி வகுப்புவாரி பிரிவினை செய்திருப்பதைப் புனராலோசனை செய்து திருத்தலாம்.

18. யாதொரு நபர் மியுனிஸிபாலிடிக்குள் ஆபீஸாவது தொழிலிடமாவது வைத்திருந்து, குறிப்பிடப்பட்ட சங்கியையுள்ள தினங்களுக்கு அவர் அதனுடன் சம்பந்தப்பட்டிருந்தால், அவர் - 93-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு மியுனிஸிபாலிடிக்குள் ஒரு தொழில் - கைவினை அல்லது வேலையைச் செய்திருப்பதாகவாகிலும், வியாபாரம் நடத்தியிருப்பதாகவாகிலும், உத்தியோகம் வகித்திருப்பதாகவாகிலும் கருதப்படுவார்.

19. அக்கிராசனாதிபதியானவர் - 17-வது விதியின்படி வரி விதிக்கத்தக்கவர்களாயிருந்தும் நிஷ்கரிஷையான சம்பளம் அல்லது பிரதிபலன் வரப்பெறாத சகல நபர்களையும், அவர்களுடைய வியாபாரத்தின் தன்மையையும் பிரசித்தியான மதிப்பையும் அனுசரித்தும், வாசஸ்தலம் தொழிலிடம் ஆகிய இவைகளின் பரிமாணத்தையும் வாடகையையும் அனுசரித்தும், வியாபாரம் நடத்தும் சாமான்களின் அளவை அனுசரித்தும், வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கிற நபர்களின் சங்கியையையும் கவர்ன்மென்டாருக்குச் செலுத்தும் வருமான வரியையும் அனுசரித்தும் பொதுவாக ஆலோசனைசெய்து வகுப்பு வாரியாய்ப் பிரிக்கலாம். வரிவிதிக்கப்பெற்ற எந்த நபரையும் கணக்குகளை ஹாஜர்ப்படுத்தும்படி அக்கிராசனாதிபதி கேட்கக்கூடாது; ஆனால், யாதொரு நபர் - தாம் மியுனிஸிபாலிடிக்குள் செய்துகொண்டிருக்கும் தொழில்-கைவினை அல்லது வேலையினால் தமக்குக் கிடைத்தவரும்படி அக்கிராசனாதிபதி தம்மை எந்த வகுப்பில் சேர்த்திருக்கிறாரோ அந்த வகுப்பின் மிகவும்

குறைந்த அளவுள்ள வரும்படிக்கும் குறைவாயிருக்கிறதென்று காட்டுவதற்காகத் தம்முடைய கணக்குகளை ஹாஜர்ப்படுத்தலாம்.

78. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 21-வது விதியில் கண்டிருக்கும் சுங்க அட்டவணையில் அடியிற்கண்ட திருத்தங்களைச்செய்யவேண்டும் :—

(a) முதல் பாபத்தில் 'மோடார்வண்டி' என்னும் வார்த்தைகளுக்குமுன் 'நீராவி அல்லது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும; மேலும்,

(b) இரண்டாவது பாபத்துக்குப் பிறகு அடியிற்கண்ட அதிகப்படியான பாபத்தை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

	ரூ.
" மோடார் லாரி என்னும் சுமையேற்றிக்கொண்டு போகும் மோடார் வண்டி ஒன்றுக்கு	2-0 "

79. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 22-வது விதியை விட்டுவிடவேண்டும்.

80. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 23-வது விதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

'அடியிற்கண்டபடி வரி விதிப்பு செய்திருப்பதைக் குறித்தும் விதிக்கப்பட்ட வரிகளைக் குறித்தும் மாத்திரமே கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்; மற்ற எதைக்குறித்தும் அப்பீல் செய்துகொள்ளலாகாது :—

(a) 3-வது விதியின்படி ரெவினியு டிவிஷனல் ஆபிஸரால் செய்யப்பட்ட வரி விதிப்புகள் ;

(b) 16-வது விதியின்படியும், 17-வது விதியின்படியும் அக்கிராசனாதிபதியால் நடத்தப்பட்ட நடவடிக்கைகள் ;

(c) யாதொரு புனராலோசனை மனுவின்மேல் 13-வது விதியின்படி அக்கிராசனாதிபதி செய்யும் உத்தரவு ;

(d) யாதொரு வண்டி, பிராணி அல்லது பாரவண்டிக்கு யாதொரு வரியையாகிலும் வேலைக்காரர்களுக்கு வரியையாகிலும் அக்கிராசனாதிபதி விதிப்பது.'

81. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 27-வது விதியில், 'அப்பீலின்மேல்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக '24-வது விதியின்படியாவது அப்பீலின்மேலாவது' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

82. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 36-வது விதியில், அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) ஆரம்பத்தில் '(1)' என்னும் இலக்கத்தையும் நகவளைவுக் குறிகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(b) (b) குறிப்பிட்ட பகுதியிலுள்ள ';' என்னும் அடையாளத்துக்கு பர்த்தியாக முற்றுப்புள்ளியை அமைத்துக்கொண்டு, 'மேலும், மேற்படி தொகையையும் பிராதுச் செலவையும் கூட அவர் செலுத்தவேண்டும்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும் ;

(c) அடியிற்கண்டதை (2) குறிப்பிட்ட உபவிதியாக அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"(2) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி அபராதம் விதிக்கும்போது, மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்த அபராதத்துடன்கூட அப்படிப்பட்ட நபர் (1) குறிப்பிட்ட உபவிதியிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளின்படி அவரிடமிருந்து சேரவேண்டியதாயிருக்கும் தொகையையும் பிராதுச்செலவையும் கோர்ட்டில் செலுத்தவேண்டுமென்று கட்டளையிடவேண்டும் ;" மேலும்,

(d) (c) குறிப்பிட்ட பகுதியை விட்டுவிடவேண்டும்.

83. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 36-வது விதிக்குப் பிறகு அடியிற்கண்ட விதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"36-A. ஜப்தி செய்யப்பட்ட சொத்தை முந்திய விதிகளின்படி எப்போதேனும் விற்பனை செய்தால் அதில் அக்கிராசனாதிபதியாவது யாதொரு மியுனிஸிபல் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரராவது நேராகவாகிலும் நேராகவல்லாமல் மற்றப்படியாகிலும் எந்த சொத்தையும் வாங்கக்கூடாது."

84. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 39-வது விதியில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(i) (c) குறிப்பிட்ட உபவிதியில், 'மலஜலபாதை மறைவிடங்கள்' என்னும் வார்த்தைகளுக்குமுன் 'கடைகள், கொட்டில்கள், ப்ளின்த் (கட்டிடங்களின் அடிப்பரப்பு)' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(ii) (e) குறிப்பிட்ட உபவிதியின் கடைசியில் 'மேலே சொல்லப்பட்ட காரியங்களில் எதற்காகவாகிலும் நிலம் எடுத்துக்கொள்வதும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

85. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 4-வது ஷெட்யூலைச் சேர்ந்த 40-வது விதியிற் கண்ட (e) குறிப்பிட்ட உபவிதியில், 'இதர கைத்தொழில் சம்பந்தமான வேலைகள்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'இதர விவசாய சமபந்தமான அல்லது கைத்தொழில் சம்பந்தமான அல்லது வர்த்தக சம்பந்தமான வேலைகள்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

86. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 6-வது ஷெட்யூலிற்கண்ட அபாயகரமான வியாதிகளின் ஜாபிதாவின் கடைசியில் 'இன்ப்ளுயென்ஜா என்னும் விஷஜுரம்', 'ரிலாப்ஸிங் பீவர் என்னும் திரும்பிவரும் ஜுரம்' என்பவைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

87. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 7-வது ஷெட்யூலில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) அடியிற்கண்ட பாபத்துகளை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

(1) 30	..	(1)	பற்றுள்ளவராயிருக்கும் கௌன்ஸிலர் வோட் கொடுப்பது அல்லது வாதத்தில் கலந்து கொள்வது.	ஐம்பது ரூபாய்.
(2) 109	..		வேலையில் அமர்த்திக்கொள்ளபபட்டிருக்கும் வேலைக்காரர்களின ஜாபிதாக்கள் சவதரிக்கத் தவறுவது.	ஷை
(3) 168	..	(1)	கட்டிடங்களைப் பின்னே தள்ளிக் கட்டும்படி செய்த உத்தரவுகளின்படி நடந்துகொள்ளத் தவறுவது	ஐந்நூறு ரூபாய்.
(4) 175	..		கட்டிடங்கள் கட்டுவதற்கான மனைகளை ஒருவகை செய்வதற்குமுன் பாட்டைகள் முதலியவைகளை ஏற்படுத்தத் தவறுவது.	இருநூறு ரூபாய்
(5) 193	..	(5)	கௌன்ஸிலாரால் வெளிவிடப்பட்ட தீர்ணயப் பத்திரிகைக்கு விரோதமாய் கட்டிடம் கட்டுவது அல்லது அதைப புதுப்பிப்பது.	ஷை
(6) 194	..	(1)	தெருக்களின் மூலைகளில் கட்டிடங்களை வளைவாகக் கட்டவேண்டுமென்றுவது மூலையை வெட்டி உள்ளே தள்ளிக் கட்டவேண்டுமென்றுவது செய்த உத்தரவின்படி நடந்துகொள்ளத் தவறுவது.	நூறு ரூபாய்.
(7) 261-A	..		சொந்த மார்க்கெட்டைப் புதிதாய்க் திறப்பது அல்லது திறந்து வைத்திருப்பது.	ஐந்நூறு ரூபாய்.
(8) 270-C	..		பாரவண்டிகள நிற்கும் இடத்தை சொந்தத்தில் புதிதாய்த் திறப்பது அல்லது திறந்து வைத்திருப்பது.	இருநூறு ரூபாய்.
(9) 270-D	..		லைஸென்ஸ் இராமலாவது லைஸென்ஸுக்கு விரோதமாகவாவது பாரவண்டிகள் நிற்கும் இடத்தை சொந்தத்தில் திறந்து வைத்திருப்பது.	ஷை
(10) 279	..	(1)	பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான புதிய இடத்தை லைஸென்ஸில்லாமல் ஏற்படுத்துவது முதலியது.	நூறு ரூபாய்.
(11) 325	..		ஸம்மன்படி நடந்துகொள்ளத் தவறுவது ..	ஐம்பது ரூபாய்.

(b) அடியிற்கண்ட பாபத்தை விட்டுவிடவேண்டும் :—

158	..	(1)	அசுத்தங்களை வனம் முதலியதில் போட்டுவைக்கத் தவறுவது.	ஷை

(c) 1-ம் கலத்தில்,—

(i) 113	என்பதற்குப் பிறகு வரும்	119	என்னும் இலக்கத்தை	127	என்று மாற்றவேண்டும்.	
(ii) 178	,,	183	,,	180	,,	
(iii) 299	,,	300	,,	301	,,	

(d) (2) குறிப்பிட்ட கலத்தில் 143-வது, 158-வது பிரிவுகளுக்கு எதிரிலுள்ள '(2)' என்னும இலக்கத்தையும் நகவளைவுக் குறிகளையும் விட்டுவிடவேண்டும்.

(e) 270-வது பிரிவுக்கு எதிரிலே (3) குறிப்பிட்ட கலத்தில் 'பொருள்களை' என்னும் வார்த்தைக்குப் பிறகு 'அல்லது பிராணிகளை' என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேணடும்.

88. ஷை ஆக்டுடன் சேர்த்திருக்கும் 8-வது ஷெட்யூலில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(a) அடியிற்கண்ட பாபத்துகளை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

(1) 194 (1)	..	தெருக்களின் மூலைகளில் கட்டிடங்களை வளைவாகக் கட்டவேண்டுமென்றுவது மூலையை வெட்டி உள்ளே தளளிக் கட்டவேண்டுமென்றுவது செய்த உத்தரவின்படி நடந்துகொள்ளத் தவறுவது.	பத்து ரூபாய்.

(2) 270-D ..	லைசென்ஸ் இராமலாவது லைசென்ஸுக்கு விரோதமாகவாவது பாரவண்டிகள் நிற்கும் இடத்தை சொந்தத்தில் திறந்து வைத்திருப்பது.	இருபது ரூபாய்.
(3) 279 ..	லைசென்ஸ் இல்லாமலே யாதொரு இடத்தைப் பிறே தங்களை ஒருவகை செய்வதறகாக உபயோகிப்பது.	நூறு ரூபாய்.
(4) 298 ..	பொது ஜனங்கள் வேடிக்கைக்காகக் கூடும் இடத்தை மூடிவிடத் தவறுவது.	நூறு ரூபாய்.

(b) 1-ம் கலத்தில், 148 என்னும் இலக்கத்துக்குப் பிறகுள்ள '168' என்னும் இலக்கத்துக்கு பர்த்தியாக '167' என்னும் இலக்கத்தை அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஷெட்யூல்.

பிரிவு. (1)	உட்பிரிவு. (2)	அடியிற்கண்ட வார்த்தைகளுக்கு பர்த்தியாக. (3)	அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்க. (4)
4	(1)	தாம் உத்தேசித்திருப்பதாக	தாங்கள் உத்தேசித்திருப்பதாக
..	(3)	அவர்	அவர்கள்
5	(1) (a) குறிப்பிட்ட விலக்கு நிபந்தனை	தாம் அப்படிப்பட்ட	தாங்கள் அப்படிப்பட்ட
		தாம் அப்படி செயய உத்தேசிக்கிறாரோ	தாங்கள் அப்படி செய்ய உத்தேசிக்கிறார்களோ
7	(2) விலக்கு நிபந்தனை	தாம் அப்படி செய்ய உத்தேசிக்கிறாரோ	தாங்கள் அபபடி செய்ய உத்தேசிக்கிறார்களோ
11	..	அவரே	அவர்களே
12	(1)	தாம்	தாங்கள்
..	விலக்கு நிபந்தனை	தாம் செய்ய உத்தேசித்திருக்கிறாரோ	தாங்கள் செய்ய உத்தேசித்திருக்கிறார்களோ
34	(2) (d)	தமக்கு	தங்களுக்கு அல்லது தமக்கு
36	(1)	அவர்	அவர்கள்
39	(2)	தாம் நிச்சயிக்கக்கூடிய	தாங்கள் நிச்சயிக்கக்கூடிய
40	(2)	அவர்	அவர்கள்
41	(1)	தமக்கு அவசியமாகத் தோற்றுகிற பட்சத்திலே	தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற பட்சத்திலே
..	(a) குறிப்பிட்ட விலக்கு நிபந்தனை	தாம் அந்தப்படி செய்ய	தாங்கள் அந்தப்படி செய்ய
..	(3) (b)	தமக்கும்	தங்களுக்கும்
71	(4)	அவருடைய சம்மதத்துடனுவதன்றி	அவர்களுடைய சம்மதத்துடனுவதன்றி
123	(3)	தாம் சொல்லுகிற	தாங்கள் சொல்லுகிற
252	..	தமக்குத் தகுதியாகத் தோற்றும்	தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும்
303	(2)	அவர்	அவர்கள்
363	..	தமக்குச் சங்கிரமித்திருக்கிற	தங்களுக்குச் சங்கிரமித்திருக்கிற
4-வது ஷெட்யூல்	விதி 61	அவர் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு செய்வார்.	அவர்கள் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு செய்வார்கள்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

1920-ம்௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டை சுமார் இரண்டு வருஷகாலம் வாஸ்தவத்தில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து பார்த்ததில் ஏற்பட்ட அனுபவத்தினால் தெரியவந்த கஷ்டங்களை நிவர்த்திசெய்வதே இந்த மசோதா ஆக்டின் பிரதான நோக்கமாகும்.

அமைப்பு.

இந்த மசோதா ஆக்ட் மூலமாய் இந்த தலைப்பில் மூன்று முக்கியமான மாறுதல்கள் செய்யப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்வர ஸ்திரீகளுக்கு அனுமதிகொடுக்கவும், கூட்டுக் கமிட்டிகள் பிரவர்த்திக்கக்கூடிய சந்தர்ப்பங்களை விஸ்தாரப்படுத்தி, அவைகளின் அலுவல்களை அதிகப்படுத்தவும், மியுனிஸிபல் காரியங்களைப் பரிபாலனம் செய்வது எவ்வளவு காலத்துக்காகிலும் நின்றுவிடும்படியான எது ஏற்படுவதை விலக்கிவிடவும் உத்தேசித்திருக்கிறது. சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்வர கிராமாந்தரங்களிலுள்ள ஸ்திரீகளுக்கு பாத்தியதையுண்டு. மியுனிஸிபல் விஸ்தீர்ணங்களில் அவர்களுக்கு அதே பாத்தியதை இல்லையென்று மறுப்பது ஒழுங்கீனமாயிருக்கிறது. பிரதேச சபைகளுக்குள் எவையேனும் விவாதங்கள் ஏற்பட்டால் அவைகளைப் பைசல் செய்வதற்கும், அவைகளெல்லாம் எந்த விஷயங்களில் அக்கறையுள்ளவைகளாயிருக்கின்றனவோ அல்லது எந்த விஷயங்களில பொறுப்புடையவைகளாயிருக்கின்றனவோ அந்த விஷயங்களில் ஒத்துழைப்பதற்கும் கூட்டுக் கமிட்டிகள் ஏற்படுத்தும்படி நிர்ப்பந்திக்க கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் கொடுப்பது அவசியமென்று தெரியவந்திருக்கிறது. சகல பிரதேச சபைகளும் சம்மதித்தால் மாத்திரமே,

இப்போது கூட்டுக் கம்மிட்டி ஏற்படுத்தலாம். அப்பிரகாரமே, கவர்ன்மென்டாரும் குறித்த சில சந்தர்ப்பங்களில் ஷை சபைகளை ஏற்படுத்தும்படி ஆலோசனை மாத்திரம் சொல்லலாம். மேலும், அப்படிப்பட்ட கம்மிட்டிகளுக்கு அதிகாரங்களை பிரித்துக்கொடுப்பது விஷயமாய் இப்போதிருக்கிற சட்டமானது தெளிவற்றதாயிருப்பது மாத்திரமல்லாமல், அந்தக் கம்மிட்டிகளின் அமைப்பையும் அவைகள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையையும் சரியாய் நிச்சயிப்பதற்கு அதில் நிபந்தனை கண்டிருக்கவும் இல்லை. அவசியமாயிருந்தால் கூட்டுக் கம்மிட்டிகளை அமைக்கும்படி நிர்ப்பந்திப்பதற்கு இந்த மசோதா ஆக்டில் அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், அவைகள் கவனிக்கவேண்டிய வேலையையும் விஸ்தாரப் படுத்தியிருக்கிறது. இந்தக் கம்மிட்டிகளில் வேலை சரியாய் நடந்தேறுவதற்காக ரெகுலேஷன்கள் செய்யவும் அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. அக்கிராசனாதிபதியின் உத்தியோகம் காலியாகி, உப அக்கிராசனாதிபதி எவரும் இராமற்போனால், அக்கிராசனாதிபதி ஒருவரைத் தெரிந்தெடுப்பதற்காக ஐந்து கௌன்ஸிலர்கள் சபை கூட்டவேண்டியிருக்கிறது. அந்தப்படி ஒரு அக்கிராசனாதிபதி தெரிந்தெடுக்கிறவரையில், மியுனிஸிபல் பரிபாலனம் நின்றிருக்கவேண்டியிருக்கிறது. ஐந்து கௌன்ஸிலர்கள் அந்தப்படி சபை கூடாவிட்டாலும் அவசியமான நடவடிக்கை நடத்த மறுத்தாலும், ஷை பரிபாலனம் அடியோடு நின்று போய்விடும். எப்படியிருந்தபோதிலும், அக்கிராசனாதிபதி உத்தியோகத்தில் காலி ஏற்படுவதற்கும் அவருக்குபின் வரவேண்டியவரைத் தெரிந்தெடுப்பதற்கும் இடையில் பரிபாலனத்தை நடத்திக்கொண்டே போவதற்காக நிபந்தனை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும். உப அக்கிராசனாதிபதி ஏற்பட்டிராத ஒரு மியுனிஸிபாலிடியில் அக்கிராசனாதிபதி மரண மடைந்தது காரணமாகவும், இன்னொரு மியுனிஸிபாலிடியில் அக்கிராசனாதிபதி உப அக்கிராசனாதிபதி ஆகிய இருவரும் சிறையிடப்பட்டது காரணமாகவும் ஏறக்குறைய மேற்சொல்லிய மாதிரியாகவே சென்ற வருஷத்தில் பரிபாலனம் நடக்காமல் நின்றுபோய்விட்டது. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்படுவது இந்த மசோதா ஆக்டினால் தடைப்படும்.

9-வது, 50-வது பிரிவுகளில் செய்திருக்கும் திருத்தங்கள் சில்லறை திருத்தங்களாகும். (a) கௌன்ஸிலர் எவரும் தெரிந்தெடுக்கப்படாதபோதும் (b) கௌன்ஸிலின் சபைகளுக்கு வரத்தவறிபோனது காரணமாக யாதொரு கௌன்ஸிலர் தம்முடைய ஸ்தானத்தைக் காலி செய்யும்போதும் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையை ஷை திருத்தங்களைக்கொண்டு மாற்றியிருக்கிறது.

வரி விதிப்பது.

சொத்து வரி 'கம்பெனிகளுக்கு வரி, யாத்திரைக்காரர்களுக்கு வரி ஆகிய இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் முக்கியாம்சத்தில் மாற்றப்பட்டிருக்கின்றன. மேலும், கக்கூஸ் வரி விதிப்பதற்கும் நிபந்தனை கண்டிருக்கிறது. கட்டடங்களுக்கும் நிலங்களுக்கும் வெவ்வேறு வீதங்களின்படி வரி விதிப்பதற்கு இந்த மசோதா ஆக்டில் அனுமதி கொடுத்திருக்கிறது. மேலும், வீடுகளைச் சேர்ந்தவையாயிராமலும் விவசாயத்துக்கு ஏற்றவையாயிராமலுமுள்ள நிலங்களுக்கு அவைகளுடைய மூலதன மதிப்பை அனுசரித்து கௌன்ஸில்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி வேறொரு முறைப்படி வரி விதிப்பதற்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறது. கட்டடங்களுக்காவது நிலங்களுக்காவது அவைகளின் விஸ்தீரணத்தை ஆதாரமாகக் கொண்டு வரி விதிக்கும் முறையை எடுத்துவிட்டிருக்கிறது. இனிமேல் நிலங்களுக்கு வருஷவாரி வாடகை மதிப்பின்மேலாவது மூலதன மதிப்பின் மேலாவது வரி விதிக்கப்படும். கம்பெனிகளின் தொகை செலுத்தப்பட்ட மூலதனத்தின்மேல் அவைகளுக்கு வரி விதிப்பதிலுள்ள அனேக ஒழுங்கீனமான விஷயங்களை நீக்கிவிட உத்தேசித்திருக்கிறது. மியுனிஸிபாலிடியில் அவைகள் நடத்திய மொத்த வியாபார மதிப்பை அனுசரித்து அவைகளுக்கு வரி விதிக்கப்படும். கம்பெனி வரி தொழில் வரி ஆகிய இவைகளுக்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளின் சொல்லமைப்பைத் திருத்தியிருப்பதுடன், 4-வது ஷெட்யூலிலுள்ள வரிகளின் வீத நிர்ணயங்களையும் மாற்றி யெழுதியிருக்கிறது. ஓரிடத்துக்கு வருகிற பிரயாணிகளிடமிருந்தும் விட்டு வெளியே போகிற பிரயாணிகளிடமிருந்தும் யாத்திரைக்காரர்களின் வரி வசூலிப்பதனால், அந்த வரியை இந்தியா முழுவதும் அனேக ஸ்டேஷன்களில் விதிக்கவேண்டியிருக்கிறது. இதனால் பல ரெயில்வே பரிபாலகர்களின் கணக்குகள் பாதிக்கப்படுகின்றன. இது அனாவசியமாய் வேலையைச் சிக்கலாக்குவதாகும். ஆகவே, யாத்திரைக்காரர்களுக்கு ஒரேமுறை, அதாவது, அவர்கள் யாத்திரை ஸ்தலத்தை விட்டுப்போகும்போது யாத்திரை ஸ்தலத்துக்கு அதிசமீபத்திலிருக்கும் ரெயில்வே ஸ்டேஷன் அல்லது ஸ்டேஷகளில் மாத்திரமே வரிவிதிக்க உத்தேசித்திருக்கிறது. யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கும் வரி வீதங்களை இரட்டத்தனை ஆக்கியிருப்பதுமல்லாமல், மத்திய வகுப்புக்காகவும் ஒரு வீதம் ஏற்படுத்தியிருக்கிறது. கக்கூஸ் சுத்திசெய்வதற்காக இப்போது வாங்கும் கட்டணமானது முன்னதாய்ச் செலுத்தப்படத்தக்கதாயிருந்தாலும், அதை வசூலிப்பதில் அனேகமாய்க்கஷ்டம் ஏற்படுகிறது. மேலும், இந்தக் கட்டணத்தை வரியாக மாற்றவேண்டுமென்று பிரதேச சபைகளின் மகாநாடுகளில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சுங்கம்.

சேர்ந்தாற்போலுள்ள மியுனிஸிபாலிடிகளுக்குள்ளும், மியுனிஸிபாலிடிகள், டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆகிய இவைகளுக்குள்ளும் சுங்கவாயில்களை இன்ன இடத்தில் அமைக்கவே

ண்டுமென்பது விஷயமாயும் சுங்க வருமானத்தைப் பங்கிட்டுக்கொள்வது விஷயமாயும் சமீபத்தில் ஏற்பட்ட விவாதங்களே 111-வது பிரிவில் செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தத்துக்குக் காரணமாகும். சேர்ந்தாற்போலுள்ள இரண்டு மியுனிஸிபாலிடிகளின் பொது எல்லையில் சுங்கவாயில்கள் அமைக்கக்கூடாதென்று தடுத்திருப்பதுமல்லாமல், பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து சுங்கவாயில்களின் சங்கியையையும் அவைகள் அமைக்கப்படும் இடங்களையும் அக்கம்பக்கத்திலுள்ள பிரதேச அதிகார சபைகள் வருமானத்தைப் பங்கிட்டுக் கொள்வதையும் குறித்து ஒழுங்கேற்படுத்தும் காரியத்துக்காக கவர்ன்மெண்டார் பிரவேசிப்பதற்கான அதிகாரம் அவர்களிடத்திலேயே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிரதிபலன் தரக்கூடிய முயற்சிகள்.

மார்க்கெட்டுகள் விஷயமாயும் பாரவண்டி நிற்கும் இடங்கள் விஷயமாயும் சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டில் கண்டிருக்கும் நிபந்தனைகளை இந்த மசோதா ஆக்டில் சேர்த்திருக்கிறது. மியுனிஸிபல் எல்லைகளுக்கு மூன்று மைல் தூரத்துக்குள்ளிருக்கும் விஸ்தீர்ணத்தின் விஷயத்தில், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகள், 5-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களில் எதற்காகவாவது உபயோகிக்கப்படும் இடங்கள் ஆகிய இவைகளுக்கு லைஸென்ஸ் கொடுப்பது சம்பந்தமாய் மியுனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் விசாரணை அதிகாரத்தைப்பற்றி விவாதம் ஏற்படுவதை விலக்கியிருக்கிறது.

பல வகைப்பட்டவை.

(1-வது, 7-வது, 8-வது ஷெட்யூல்களைத் தவிர மற்ற) சகல ஷெட்யூல்களையும் கிரமமாய் சட்டநிரூபண சபையாரால் செயயப்பட்ட சட்டதிட்டங்கள் மூலமாகவல்லாமல், லோகல் போர்டுகளாக்டில் செய்திருப்பதுபோலவே சட்டநிரூபண சபையாரின் அங்கீகாரத்தைப் பெற்று மாற்றுவதற்கு அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது.

எந்த விஷயங்களைக் குறித்து 303-வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் விதிகள் செய்யலாமோ அவைகளுடனும் 306-வது பிரிவின்படி மியுனிஸிபல் கௌன்ஸிலார் சகாயச் சட்டங்கள் செய்யக்கூடுமோ அவைகளுடனும் சில அம்சங்கள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பின்னே சொல்லப்பட்டவைகளில் மிகவும் முக்கியமானது தாதிகள் அல்லது சுதேச மருத்துவச்சிகளைப் பழக்குவதற்கும் அவர்களுக்கு லைஸென்ஸ் கொடுப்பதற்கும சம்பந்தப்பட்டதாகும்.

டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படியாகிலுஞ்சரி வேறே யாதொரு ஆக்டின்படியாகிலுஞ்சரி யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலுக்கும் வேறே யாதொரு கன்டோன்மெண்ட் அல்லது பிரதேச அதிகார சபைக்கும் ஏற்படும் எந்த விவாதத்தையாகிலும் தீர்மானம் செய்யும் காரியத்துக்காக ஒருபுதிய (369-வது) பிரிவு பிரஸ்தாப ஆக்டில் சேர்த்திருக்கிறது. ஷை விவாதத்தைப்பற்றி பிரதேச கவர்ன்மெண்டார் விசாரித்து அதை அவர்களே தீர்மானஞ் செய்யவோ அல்லது மத்தியஸ்தர்கள் அல்லது கூட்டுக்கம்மிட்டிகளின் தீர்மானத்துக்கு அதை அனுப்பவோ அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

இன்னும் அனேக மாறுதல்களைச் செய்யவும் சந்தர்ப்பம் வாய்க்கவே அந்தப்படியே செய்திருக்கிறது. அவைகளைக்குறித்து இந்த இடத்தில் பிரத்தியேகமாய்ச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தங்களின் நோக்கம் இன்னதென்று அவைகளிலிருந்தே விளங்கும்.

ஷெட்யூல்களில் செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தங்கள் அனேகமாய் முந்திய பாகத்தில் செய்த திருத்தங்கள் காரணமாகச் செய்யப்படும் திருத்தங்களாகும்.

பகுதிகளைப்பற்றிய குறிப்புகள்.

பகுதி 2.—சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு அவைகளின்படி லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட இலாகா மந்திரியவர்களின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருப்பது காரணமாக இந்த மாறுதல் செய்வது அவசியமாயிருக்கிறது.

பகுதி 3.—இது 2-ம் பகுதியின் காரணமாய் ஏற்பட்டதாகும்.

பகுதி 4.—கம்பெனி என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தம் குறைவாயிருப்பதால், அனேக அன்னிய நாட்டுக் கம்பெனிகள் கம்பெனி வரி செலுத்தாமலே தப்பித்துக் கொண்டு வந்திருக்கின்றன. இந்த மசோதா ஆக்டில் சொல்லியிருக்கும் அர்த்தம் 1922-ம்௵த்திய இந்துதேசத்து வருமானவரி ஆக்டிலிருந்து எடுக்கப்பட்டது.

பகுதி 5.—இப்போதைய 4-வது பிரிவைச் சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவின்படி, யாதொரு புதிய மியுனிஸிபாலிடி எந்த யூனியன் போர்ட் ஸ்தானத்தில் ஏற்படுத்தப்படுகிறதோ அந்த யூனியன் போர்டின் நிதியும் சொத்தும மாத்திரமே அந்த மியுனிஸிபாலிடியிடத்தில் சங்கிரமிக்கிறது. தாலூகா போர்டுகளிடத்திலும் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளிடத்திலும் சங்கிரமித்திருந்த பாடசாலைகளையும் வைத்திய இலாகா கட்டிடங்களையும் பாட்டைகளையும் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட மியுனிஸிபாலிடிகளுக்கு ட்ரான்ஸ்பர் செய்யும் விஷயத்தில் சில இடங்களிலே தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது.

எந்த லோகல் போர்டுக்கு பர்த்தியாக மியுனிஸிபாலிடி ஏற்படுத்தப்படுகிறதோ அந்த லோகல் போர்டுக்குக் கடன்கள் எவையேனும் இருந்தால் அவைகளைத் தீர்ப்பதற்குங்கூட நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 6.—கௌன்ஸிலர் உத்தியோகத்தை விட்டுப்போகும் அபேக்ஷகர் மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தஞ் செய்யலாமென்று ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனை மூலதத்துவத்தை நோக்கும்போது சரியானதென்று சொல்வது கஷ்டமாயிருக்கும் போலிருக்கிறது. உத்தியோகத்தைவிட்டு நீங்கும் கௌன்ஸிலா வேலை பாா்க்க இஷ்டமில்லாதவராயிருந்தால் மற்றொரு கௌன்ஸிலரைத் தெரிந்தெடுக்க இப்போதிருக்கும் 9-வது பிரிவைச் சேர்ந்த ( ) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கௌன்ஸிலருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. கௌன்ஸிலார் அந்தப்படி தெரிந்தெடுக்கத் தவறிப்போகும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் தொகுதியில் புதிதாய் எலெக்ஷன் நடத்த அக்கிராசனாதிபதிக்கு அதே உட்பிரிவின்படி அதிகாரம் கொடுத்திருக்கிறது. இந்தப்படி அதிகாரம் கொடுத்திருப்பதைக்கூட நியாயமென்று சொல்வது கஷ்டமாயிருக்கிறது. பிரஸ்தாப பகுதியினால இந்த சிக்கல்களெல்லாம நீக்கப்பட்டிருக்கின்றன. யாதொரு எலெக்ஷனில் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால் உடனே இன்னொருவரைத்தெரிந்தெடுப்பதற்காகத் தெரிந்தெடுப்பவர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்றும், அந்த எலெக்ஷனிலும் எவரும் தெரிந்தெடுக்கப்படாமற் போகிறபட்சத்திலே, பிரதேச கவர்ன்மெண்டார் பிரவேசித்து யாதொரு நபரை நேமகம் செய்யவேண்டுமென்று இதில் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 7.—அக்கிராசனாதிபதி உத்தியோகத்தைப் பார்ப்பதற்கு கொஞ்ச காலம் எவரும் இராமற்போவதைத் தடுப்பதே இந்தப் பகுதியின் உத்தேசமாகும். இப்போது, அக்கிராசனாதிபதி உத்தியோகத்தில் காலி ஏற்பட்டு, உப அக்கிராசனாதிபதி ஒருவர் இராவிட்டாலும உப அக்கிராசனாதிபதி இருந்தும் அவர் தம்முடைய அலுவல்களைப் பார்க்கச் சக்தியற்றவராய் விட்டாலும் அந்த அலுவல்களைப் பார்க்க அவருக்கு முடியாவிட்டாலும், ஐந்து கௌன்ஸிலர்கள் மற்ற கௌன்ஸிலர்களுக்கு நியாயமான நோடிஸ் கொடுத்து சபை கூட்டி, அக்கிராசனாதிபதி ஒருவரைத் தெரிந்தெடுக்கவேண்டும் இந்தப்படி செய்வதனால் எப்படியும் காலதாமதம் ஏற்படுகிறது. அக்கிராசனாதிபதி ஒருவர் தெரிந்தெடுக்கப்படுகிற வரையில் மியுனிஸிபல் வேலை நடக்காமல் நின்றுபோகும். இந்தப்படி சிறிது காலத்துக்கு வேலை நடக்காமல் நின்றுபோவதைத் தடுப்பது இந்தத் திருத்தத்தினால் சாத்தியமாகும்.

பகுதி 8.—அக்கிராசனாதிபதி ஒருவர் இருந்தும் அவர் ஊரிலிராதிருந்து அல்லது அவர் தம்முடைய வேலையைப் பார்க்கச் சக்தியற்றவராய்விட்டிருந்து, உப அக்கிராசனாதிபதியாவது சேர்மன் டெலிகேட்டாவது இராதபட்சத்தில் மியுனிஸிபல் பரிபாலனம் முற்றிலும் நடக்காமல நின்று போவதைத் தடுப்பதே இந்தப் பகுதிக்கும உத்தேசமாகும்.

பகுதி 9.—இசகனால் விட்டுப்போயிருந்த ஒரு வார்த்தை இந்தப் பகுதியினால் அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பகுதி 10.—இப்போது (i) ஸ்தாபனங்களை நிர்வாகஞ் செய்வதற்காகவும் அவைகளை மேற்பார்வையிடுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டிகளுக்கும (ii) நிலையான கம்மிட்டிகளுக்கும் பேதம் ஏற்படுத்தி, நிலையான கம்மிட்டிகளுக்கு மாத்திரமே அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கலாமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. இந்தப்படி வித்தியாசப்படுத்துவது அனாவசியமாகும். இந்தப்படி வித்தியாசப்படுத்தியிருப்பதனால் பரிபாலனம் ஒழுங்காய் நடத்தப்படுவதற்கு அனுஷ்டானத்தில் பாதகம ஏற்படுகிறபடியினால், அந்த வித்தியாசம நீக்கிவிடப்படுகிறது.

பகுதி 11.—சாதாரண சந்தர்ப்பங்களில் யாதொரு கம்மிட்டியிலுள்ள வெளி நபர்களின் சங்கியையானது அந்த கம்மிட்டி மெம்பர்களின் மொத்த சங்கியையில மூன்றில் ஒரு பங்குக்கு அதிகப்படக்கூடாதாயினும், நிபுணர்களின் ஆலோசனை உபயோகமாயிருக்கக்கூடிய சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்த சங்கியாபரிமாணத்தை மீறுவது உசிதமாயிருக்கலாம. ஆனபோதிலும், கவர்ன்மெண்டாரின் அனுமதிபெறவேண்டுமென்னும் பாதுகாப்பு ஏற்படுத்துவது அவசியமாகும். வாசஸ்தலம் விஷயமாய் ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தம் எடுத்துவிடப்படுகிறது. அதனால், இலாகாக்களின் தலைவர்களாவது நிபுணர்களாவது அப்படிப்பட்ட கம்மிட்டிகளில் ஸ்தானம் வகிப்பது சாத்தியமாயிருக்கும்.

பகுதி 12.—சபைகளில் ஒழுங்கு கலையாதபடி அக்கிராசனாதிபதிகள் பார்த்துக்கொள்வது சாத்தியமாவதற்கு (b) குறிப்பிட்ட உட்பகுதி அவசியமாயிருக்கிறது. (c), (d) குறிப்பிட்ட உட்பகுதிகளோ, கமிட்டிகள் பேருக்கு மாத்திரம் ஏற்பட்டிராமல் கிரமமாயும் முறைப்படியும வேலை செய்யவேண்டுமானால் அவை அவசியமாகும்.

பகுதி 13.—யாதொரு கூட்டுக் கம்மிட்டியானது சுங்க வரும்படியை இன்னபடி பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்று நிச்சயிப்பதைப்போன்ற யாதொரு வேலைக்காகவல்லாமல வேறெதற்காகவாகிலும் ஏற்படுத்தப்படலாமாவென்பது இப்போது சந்தேகமாயிருக்கிறது.

இந்த சந்தேகத்தை இப்போது நிவர்த்திசெய்திருப்பதுமல்லாமல், கூட்டுகம்மிட்டிகளை ஏற்படுத்தவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கான அதிகாரமும் பிரதேச கவர்ன்மென்டாரிடம் விட்டுவைக்கப்பட்டிருக்கிறது. வெளி நபர்களைக் கூட்டுக்கம்மிட்டிகளில் சேர்த்துக்கொள்வதற்கும் அந்தக் கம்மிட்டிகளின அமைப்பு சம்பந்தமாயும் அவைகள் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கைமுறை சம்பந்தமாயும் ரெகுலேஷன்கள் ஏற்படுத்துவதற்கும நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 14.—யாதொரு ராஜிநாமா இன்ன தேதியிலிருந்து செலாவணியாகுமென்பது இப்போது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதில்லை. இந்தப் பகுதியினால் அது ஸ்பஷ்டமாய் ஏற்பட்டுவிடும்.

பகுதி 15.—இப்போதிருக்கிறபடி சட்டமானது - 50-வது பிரிவின்படி யோக்கியதையற்றவர்களாய்விட்ட நபர்களின் விஷயங்களுக்காவது, வாஸ்தவத்தில் உத்தியோகம் வகிப்பதனின்றும நின்றுபோயும் கௌன்ஸிலின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும் நபர்களின் விஷயங்களுக்காவது பிரயோகப்படுகிறதில்லை. இந்தத் திருத்தத்தினால் அது அப்படிப்பட்ட விஷயங்களுக்கும் பிரயோகப்படும்.

பகுதி '6.—தெரிந்தெடுக்கப்படக்கூடிய ஸ்தானங்களின் சங்கியையாவது வார்டுகளின் சங்கியையாவது மாற்றப்பட்டால், இன்ன மெம்பர்கள் குறித்த இன்ன ஸ்தானங்களைச் சேர்ந்தவர்களென்று பிரிக்கவாகிலும், இப்போதுள்ள அல்லது இனிமேல் ஏற்படக்கூடிய காலிஸ்தானங்களை பூர்த்திசெய்வதற்காக இன்ன வார்டுகளில் எலெக்ஷன்கள் நடத்தவேண்டுமென்று தீர்மானஞ் செய்யவாகிலும் இப்போது அதிகாரமில்லை.

பகுதி 17.—இது 18-வது பகுதியிற்கண்ட திருத்தத்தின் காரணமாய் ஏற்பட்டதாகும்.

பகுதி 18.—செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்துவதற்காக 45-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஆகவே, 46-வது பிரிவிலும் அதே விஷயமாய் நிபந்தனை ஏற்படுத்துவது அனாவசியமாகும். முக்கியமாய் ஒரு பிரிவில் 'முந்திய வருஷத்துக்காக' என்றும் மற்றொரு பிரிவில் 'முந்திய வருஷத்தில்' என்றும் சொல்லியிருப்பதனால் அனாவசியமான சிக்கலுக்கு இடம் உண்டாகிறது.

பகுதி 19.—60-வது பிரிவில் சொல்லியிருப்பதையே மீண்டும் இதில் சொல்லியிருக்கிறது. ஆகவே, இதை விட்டுவிட்டிருக்கிறது.

பகுதி 20.—ஸ்திரீகள் தெரிந்தெடுக்கப்படுவதற்காக முன்வருவது விஷமாய் ஏற்பட்டுள்ள யோக்கியதைக்குறைவு நீக்கிவிடப்பட்டிருக்கிறது. மேலும், பப்ளிக் ப்ராஸிக்யூடர், அபிஷல் ரிஸீவர் முதலியவர்கள் உத்தியோகஸ்தரா அல்லவா என்பதைப்பற்றி அடிக்கடி பிரசினைகள் ஏற்படுகிறபடியால், இன்னார் கவர்ன்மென்டாரிடம் சம்பளம்பெறும் உத்தியோகஸ்தராகக் கருதப்படவேண்டுமென்று நிச்சயிப்பதற்கு அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 21.—உட்பகுதி (a).—இப்போது மியுனிஸிபல் எலெக்ஷனில் தெரிந்தெடுக்கப்படுவதற்கு நிற்க விரும்பும் யாதொரு ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டானவர் தம்முடைய ராஜிநாமாவை அனுப்பி, அது அங்கீகரிக்கப்பட்டு, மாஜிஸ்ட்ரேட்டுக்குரிய அதிகாரங்கள் எடுத்துவிடப்படவேண்டியிருக்கிறது. இவையெல்லாம் நேமக தேதிக்கு முன்பே நடக்கவேண்டியதாயிருக்கிறது. ராஜிநாமாவை ஏற்றுக்கொள்வதும் அதிகாரங்களை எடுத்துவிடுவதும் வெறும் கிரமாசாரங்களாகவே இருந்தபோதிலும், அந்தப்படி செய்வதற்கு கொஞ்ச காலம் பிடிக்கிறது. ஆகவே, நேமகஞ்செய்யும் காரியத்துக்காக, ராஜிநாமாவானது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டிடம் போய்ச் சேர்ந்தால் போதுமானதாகுமென்று உத்தேசிக்கப்படுகிறது. ஆனபோதிலும், மாஜிஸ்ட்ரேட்டுக்குரிய அதிகாரங்கள் எலெக்ஷன் தேதிக்குமுன் எடுத்துவிடப்படாதிருக்கும்பட்சத்தில், பிரஸ்தாப யோக்கியதைக்குறைவு இருப்பதாகவே கொள்ளப்படும்.

உட்பகுதி (b).—அனாவசியமாய் மீண்டும் சொல்லியிருக்கும் ஒரு உட்பிரிவை இந்தப் பகுதியில் விட்டுவிட்டிருக்கிறது.

பகுதி 22.—கௌன்ஸிலின் சபைகளுக்கு வாராமல் நின்றுபோகும் கௌன்ஸிலர்களை மறுபடியும் கௌன்ஸிலர் உத்தியோகத்தில் வைத்துக்கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைமுறை ஸ்பஷ்டமாய் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், அந்தப்படி மறுபடியும் கௌன்ஸிலர் உத்தியோகத்தில் வைத்துக்கொள்வதற்குவேண்டிய பிரதம எத்தனங்களை கௌன்ஸிலின் சபைகளுக்கு வரத்தவறிப்போன கௌன்ஸிலரே செய்ய வேண்டுமென்று நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 23.—இந்தியன் பினல் கோட் IX-A அத்தியாயத்தை நோக்கும்போது இந்தப் பிரிவுகள் அனாவசியமாகும்.

பகுதி 24.—டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டை லோகல் போர்டுகளாக்டின் பிரகாரம் இருக்கும்படி செய்வதே இந்தப் பகுதியின் உத்தேசமாகும். எலெக்ஷன் சம்பந்தமான குற்றங்களுக்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் நபர்களை அவசியமானால் நிவாரணை செய்வதற்கும் இதில் அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 25.—இதன் நோக்கம் இந்தப் பகுதியிலிருந்தே விளங்கும்.

பகுதி 26.—கௌன்ஸிலார் வேலையில் அமர்த்திக்கொள்ளும் சிப்பந்திகளின் சங்கியையயாவது அவர்களுடைய சம்பளத்திட்டத்தையாவது புனராலோசனைசெய்து திருத்துவதில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறையை சுலபமாக்கியிருக்கிறது. மேலும், அக்கிராசனாதிபதி கேட்டுக்கொள்வதன்மேலேயே அப்படிப்பட்ட பிரேரேபணைகளைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறது.

பகுதி 27.—71-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் அறுதியான தடையை அனுசரித்து வாஸ்தவத்தில் வேலைசெய்ய முடியவில்லை. ஆகவே, மிகவும் அவசியமாயிருக்கும்போது, கௌன்ஸிலாரின் அனுமதியைப் பெற்று வெளிவேலையைப் பார்க்க மியுனிஸிபல் என்ஜினீர்களுக்கும் ஹெல்த் ஆபிஸர்களுக்கும் உத்தரவு கொடுக்க உத்தேசித்திருக்கிறது.

பகுதி 28.—இது 26-வது பகுதியின் காரணமாக ஏற்பட்டதாகும்.

பகுதி 29.—எந்த பாபத்துகளின் சம்பந்தமாய்க் கௌன்ஸிலார் ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாமோ அந்த பாபத்துகளுடன் 'பிரயாண வர்த்தனைகளும்' சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பகுதி 30.—ஒரு முறை நிஷ்கரிஷை செய்யப்பட்ட வரி வீதங்களைக் குறைந்தது ஒரு வருஷ காலத்துக்காவது மாற்றக்கூடாது; அந்தப்படி மாற்றினால் முடிவு ஏற்படாமல் போவதுடன், வருஷத்துக்குள்ளேயே வரிவிஷயமாய மோசம் நடப்பதற்கு இடம் உண்டாகக்கூடும். அது விரும்பக்கூடியதல்ல.

பகுதி 31.—1921-ம்௵ ஸிம்லாவில் நடந்த ரெயில்வே மகாநாட்டில் செய்யபபட்ட சிபாரிசை அனுசரித்து, யாதொரு யாத்திரை ஸ்தலத்தை விட்டு வெளியேபோகும் யாத்திரைக்காரர்களுக்கு மாத்திரமே யாத்திரைக்காரர்களின் வரி செலுத்தும் பொறுப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால், அந்த வரியை வசூலித்து சரிக்கட்டுவது மிகவும் சுலபமாகும். எப்படியென்றால், இந்தியா முழுவதுமுள்ள பற்பல ஸ்டேஷன்களிலும் இந்த வரி விதிக்கப்பட்டு அது சம்பந்தமான கணக்குகளும் அதைச் சரிக்கட்டும் வேலையும் சிக்கலானவையாயிருப்பதற்கு பர்த்தியாக, சம்பந்தப்பட்ட மியுனிஸிபாலிடியிலாவது அதற்கு சமீபத்திலாவது மாத்திரமே இனி அது விதிக்கப்படும். மேலும், இந்த வரியைப்பற்றி 79-வது பிரிவில் முதல் தடவையாய்ச் சொல்லியிருக்கிறது. மியுனிஸிபாலிடியை விட்டாவது அதன் சமீபத்திலுள்ள இடத்தை விட்டாவது ரெயில்மூலமாய் வெளியே போகும் நபர்களுக்கு இந்த வரி விதிக்கப்படுமென்று அந்தப் பிரிவில் குறிப்பிடுவதும் அவசியமாகும். இந்த விலக்கு நிபந்தனையின் உத்தேசமென்னவென்றால், யாத்திரைக்காரர்களின் வரியிலிருந்து கிடைக்கும் பணத்தை யாத்திரைக்காரர்களின் தேகாரோக்கியத்துக்கும் சௌகரியத்துக்கும் குறைவுண்டாகாதபடி பார்த்துக்கொள்வதற்கும், யாத்திரை ஸ்தலங்களைச் சீர்திருத்துவதற்கும் அல்லது விருத்தி செய்வதற்கும் மாத்திரமே உபயோகிக்கவேண்டுமென்று வரையறை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 32.—எந்த தேதியிலிருந்து யாதொரு வரி விதிக்கவேண்டுமோ அல்லது உயர்த்தப்பட்ட யாதொரு வீதம் எந்த தேதியிலிருந்து செலாவணியாகவேண்டுமோ அந்த தேதியை கௌன்ஸிலாரின் தீர்மானத்தில் குறிப்பிடவேண்டும். அதைப் புதிதாய் விளம்பரத்தில் நிஷ்கரிஷை செய்யக்கூடாது.

பகுதி 33.—இதனால் கக்கூஸ் வரி விதிப்பதற்கு அதிகாரம் ஏற்படுகிறது. இப்போது கக்கூஸ் சுத்தி செய்வதற்காக ஏற்படுத்திருக்கும் கட்டணமானது முன்னதாகவே செலுத்தத்தக்கதாகுமென்று பாவிக்கப்பட்டுங்கூட அந்தக் கட்டணத்தை வசூலிப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகவே, அந்தக் 'கட்டணத்தை' 'வரியாக' மாற்றலாயிற்று. இஷ்டமானால் நிலங்களின் விஸ்தீர்ணத்தை அனுசரித்து அவைகளுக்கு வரி விதிக்கலாமென்று இப்போது ஏற்பட்டிருக்கும் முறையை எடுத்துவிட்டிருப்பதுமன்றி, மியுனிஸிபல் கௌன்ஸிலாருக்கு யுகதமாகத் தோற்றுகிறபட்சத்திலே, வீடுகளைச் சேர்ந்தவையாயும் விவசாயத்துக்கேற்றவையாயுமிராத நிலங்களுக்கு அவைகளுடைய மூலதன மதிப்பை அனுசரித்து வரி விதிக்கலாமென்று நிபந்தனையும் கண்டிருக்கிறது.

பகுதி 34.—உட்பகுதி (உ).—இந்த உட்பகுதி அவசியமாகும். ஏனென்றால், கட்டிடங்கள் நிலங்கள் ஆகிய இவ்விரண்டின் விஷயத்திலும் விலை மதிப்பில் ஏற்படும் குறைவுக்காக இபபோது நூற்றுக்கு 10 வீதம் கழித்துவிடவேண்டியிருக்கிறது. இது நியாயமல்லவென்பது வெளிப்படை. சாதாரணமாய் வாடகைக்கு விடப்படாத கட்டிடங்களுக்குச் சம்பந்தப்பட்ட நிபந்தனையை முன்னேயிருந்ததைக்காட்டிலும் தெளிவாக்கியிருக்கிறது.

பகுதிகள் 35, 36.—83-வது, 84-வது பிரிவுகளில் ஏற்கனவே கண்டிருக்கும் நிபந்தனைகளை தர்க்க சாஸ்திரரீதியாய் இப்போதிருப்பதைக்காட்டிலும் அதிக ஒழுங்காக அமைத்திருப்பதுடன், கக்கூஸ் வரிக்குச் சம்பந்தமாய் நிவாரணை நிபந்தனை ஒன்றும் அமைத்திருக்கிறது.

பகுதி 37.—சொத்து வரியானது இரண்டு தவணைகளாகச் செலுத்தப்படக்கூடிய வருஷவாரி வரியாகக் கொள்ளப்பட்டால், அந்த வரி வீதத்தை இரண்டாவது அரை வருஷத்தில் உயர்த்தலாமா என்பது விஷயமாய் சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த வரியானது அரைவருஷ வரியாகுமென்பதை இந்தத் திருத்தத்தின் மூலமாக ஸ்பஷ்டமாக்கியிருக்கிறது.

பகுதி 38.—காலியாயிருக்கும்போது வரி வஜா செய்துகொடுக்கும் காரியங்களுக்காக, 32-வது பகுதியில் செய்திருப்பதைப்போலவே, இந்தத் திருத்தத்திலும் கட்டிடங்களையும் நிலங்களையும் வெவ்வேறாகப் பிரித்திருக்கிறது.

பகுதி 39.—இந்தப் பகுதியின் உத்தேசம் அதிலிருந்தே விளங்கும். வாடகை முதலியவற்றைக் குறித்த விவரங்கள் வேண்டியிருக்கின்றன. அவைகளை எழுதியனுப்பும்படி கேட்க அக்கிராசனாதிபதிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

பகுதி 40.—தொகை செலுத்தப்பட்டிருக்கும் மூலதனத்தை வரிவிதிப்பதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளாமல், 'மொத்த வியாபார மதிப்பை' அதற்கு ஆதாரமாய்க் கொள்ளும்படி மாற்றியிருக்கிறது. இனிமேல் யாதொரு மியுனிஸிபாலிடியில் ஒவ்வொரு கம்பெனிக்கும் அந்தப் பிரதேசத்தில் அதனுடைய மொத்த வியாபார மதிப்பை அனுசரித்து வரி விதிக்கப்படும். பிரான்சுகள் (கிளைகள்), ஏஜென்ஸிகள் முதலியவைகள் விஷயமாய் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் இனிமேல் ஏற்படமாட்டா. விதிக்கப்படத்தக்க வரியின் உச்ச தொகை இவ்வளவென்பதையும் கம்பெனிகளை வெவ்வேறு வகுப்புகளாகப் பிரித்திருப்பதையும் விட்டுவிட்டிருக்கிறது. சொற்ப வியாபார மதிப்புடைய கம்பெனிகளை நிவாரணை செய்வதற்காக நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 41.—வர்த்தகத்தையும் பணம் கடன் கொடுப்பதையுங்குறித்துச் சொல்லியிருக்கும் விஷயங்களை விட்டுவிட்டிருப்பதுமல்லாமல், மியுனிஸிபாலிடிக்கு வெளியேயிருக்கும் வீடுகளிலிருந்தும் நிலங்களிலிருந்தும் கிடைக்கும் வரும்படியை வரி விதிப்பதினின்றும் விலக்கியும் இருக்கிறது. கிராமாந்தரங்களில்கூட இப்போது தொழில் வரி விதிக்கப்படக்கூடுமாகையால், நிவாரணை செய்வதற்கு அவசியமான நிபந்தனை (3) குறிப்பிட்ட உட்பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும், கௌன்ஸிலார் கம்பெனி வரி விதிக்காவிட்டால், சகல கம்பெனிகளும் தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகுமென்பதையும் இவ்விரண்டு வரிகளும் விதிக்கப்பட்டால், கம்பெனி வரி விதிக்கப்பட்டிராத கம்பெனிகள் மாத்திரமே தொழில் வரி செலுத்துவதற்கு உட்பட்டவையாகுமென்பதையும் ஸ்பஷ்டமாக்கியிருக்கிறது.

பகுதி 42.—நோடிஸ் பிறப்பிப்பதற்கு மாத்திரம் 95-வது பிரிவு சம்பந்தப்பட்டதாயிருக்கும்படி அதைச் சுலபமாக்கியிருக்கிறது. இன்னபடியானால் கம்பெனி வரி அல்லது தொழில் வரிகளுக்குள்ளாகவேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லும் மேற்படி பிரிவின் பாகங்கள் திருத்தப்பட்டபடிக்குள்ள 92-வது, 93-வது பிரிவுகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பகுதிகள் 43, 44.—வண்டிகளுக்கும் பிராணிகளுக்கும் பாரவண்டிகளுக்கும் விதிக்கப்படும் வரிகள் அரைவருஷ வரிகளாகுமென்று இந்தப் பகுதிகளில் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறது.

பகுதி 45.—இந்தப் பகுதியின் உத்தேசம் அதிலிருந்தே விளங்கும்.

பகுதி 46.—மியுனிஸிபாலிடிகள் சேர்ந்தாற்போலிருக்கும்பட்சத்திலே, சுங்கவாயில்களை ஸ்தாபிப்பதைக் குறித்து முடிவற்ற தொந்தரவு ஏற்படுகிறதென்று அனுபவத்தில் தெரியவருகிறது. சுங்கவாயில்களின் சங்கியை விஷயமாயும் அவைகள் அமைக்கப்பட வேண்டிய இடங்கள் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவதற்காக பொதுவான திட்டங்களோ பிரத்தியேகமான விஷயங்களில் உத்திரவுகளோ பிறப்பித்து மேற்படி விஷயங்களில் கவர்ன்மெண்டார் பிரவேசிப்பதற்கான அதிகாரம் அவர்களிடமே இருக்கும்படி ஏற்பாடு செய்வதும் அவசியமாகும்.

பகுதி 47.—இந்தியா கவர்ன்மெண்டாரால் எடுத்துக் காட்டப்பட்ட குறைகள் நீங்கும்படியாக இந்தப் பிரிவை திருத்தியெழுதியிருக்கிறது. அநேக வருஷங்களுக்கு ஒருமுறை வருகிற கும்பகோணம் மஹாமகம், பெஜவாடா புஷ்கரம் ஆகிய இந்த உற்சவங்களைப்போன்ற உற்சவங்களின் விஷயத்தில் யாத்திரைக்காரர்களுக்கு வரி விதிப்பதற்காக நிபந்தனை கண்டிருக்கிறது. அப்படிப்பட்ட விஷயங்களில் ஒவ்வொரு சமயத்திலும் இந்த வரியானது வரையறுக்கப்பட்ட கால அளவுக்கு விதிக்கப்படும். ஆயினும், அடிக்கடி யாத்திரை செய்யப்படுகிற விஷயத்தில், வருஷமுழுவதும் வரிவிதிக்கலாம். "ஒவ்வொரு தடவையும் யாத்திரை போவதற்குமுன்" என்னும் வார்த்தைகளை "ஒவ்வொரு தடவையும் யாத்திரை போவது விஷயமாகவும்" என்று மாற்றியிருக்கிறது. திருத்தியெழுதப்பட்டிருக்கும் பிரிவின்படி, வரியை விதிப்பதற்கு இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதி பெறப்படும்; மேலும் வரி விதிப்பதற்கு ஒருமுறை அனுமதி கொடுக்கப்பட்டால், இன்ன சந்தர்ப்பத்திலும் இன்ன கால அளவுக்கும் வரி விதிக்கவேண்டுமென்பதைப்போன்ற இதர விவரங்களைப் பிரதேச சபையார்-சம்பந்தப்பட்ட ரெயில்வே பரிபாலகர்களுடன் கலந்து ஆலோசித்தும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தைப் பெற்றும் நிச்சயித்துக்

கொள்வார்கள். யாத்திரை ஸ்தலமானது யாதொரு மியுனிஸிபாலிடிக்குக் கொஞ்சம் தூரத்திலிருந்தாலும், இந்த வரியானது அந்த மியுனிஸிபாலிடியின் சார்பாக விதிக்கபபடுமென்பதை ஸ்பஷ்டமாக்கியிருக்கிறது ஏனென்றால், அதன் எல்லைகளுக்கு வெளியில் இருக்கும் யாத்திரை ஸ்தலத்துக்குப் போகும் யாத்திரைக்காரர்களின் தேகாரோக்கியத்துக்காகவும் சௌக்கியத்துக்காகவும் வழியில் விசேஷ ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கும். வரி வீதங்களை ஆக்டிலேயே சேர்த்திருப்பதுமல்லாமல், அவைகளை இருமடங்காக்கியுமிருக்கிறது. ஏனென்றால், இந்த வரி யாத்திரைக்காரர்கள் பிரஸதாப இடத்தைவிட்டுப் போகும்போது மாத்திரமே விதிக்கப்படத் தக்கதாகும். வாஸ்தவமான வரி வீதங்கள் விஷயமாய் இந்தியா கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெறவேண்டுமென்னும் நிபந்தனையை விட்டுவிட்டிருக்கிறது. மேலும், மத்திய வகுப்பு டிக்கெட்டுகளுக்கு ஒரு பிரத்தியேகமான வீதம் ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 48.—வசூலிக்க முடியாத வரிகளையும் சுங்கங்களையும் இப்போது கௌன்ஸிலார் கணக்கிலிருந்து அடித்துவிடக்கூடுமாயினும், இதர பாக்கிகளின் விஷயத்தில் அவர்கள் அந்தப்படி செய்ய முடியாது. அப்பிரகாரமே இதர பாக்கிகளைக் கணக்கிலிருந்து அடித்துவிட அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இதுவிஷயத்தில் ஒரு காப்பு நிபந்தனையாக கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெறவேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

பகுதி 49.—சொந்த வீடுகளிலுள்ள கக்கூஸுகளைச் சுத்தி செய்வதற்கான வரியானது சொத்து வரியின் பாகமாக விதித்து வசூலிக்கப்படவேண்டுமாகையாலும், கக்கூஸ் சுத்தி செய்வதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்ய கௌன்ஸிலார் கடமைபட்டிருக்கிறபடியாலும், இந்தப் பிரிவுகள் செலாவணியாகத் தக்கவையல்ல.

பகுதி 50.—இது - ஹிந்துமத சம்பந்தமான இனுங்களைக் குறித்த மசோதா ஆக்டை அனுசரித்து எழுதப்பட்டிருக்கிறது. யாத்திரை ஸ்தலமானது மியுனிஸிபல் எல்லைகளுக்கு வெளியேயிருந்தாலும், அந்த ஸ்தலத்துக்குப் போகும் யாத்திரைக்காரர்களுக்காக வழியில் ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிருககும் பட்சத்தில், சகாயத்தொகை விதித்து வாங்குவதற்கு நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 51.—வருமானம் குறைவாயுள்ள கௌன்ஸில்களைச் சேர்ந்த பாட்டைகளின் பாரமரிப்பை அக்கம்பக்கத்திலுள்ள பிரதேச சபைகளிடத்தில் ஒப்புவிப்பதனால் பணச்செலவு குறைவதுடன் பராமரிப்பும் நன்றாயிருக்குமென்று தோற்றுமானால், அந்தப்படியே அவர்கள் ஒப்புவிப்பது சாத்தியமாயிருக்கும்படிச் செய்வதே இந்தப் பகுதியின் நோக்கமாகும்.

பகுதி 52.—சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 160-வது பிரிவை அனுசரித்து இந்தப் பகுதி எழுதப்பட்டிருக்கிறது.

பகுதி 53.—யாதொரு பொதுத் தெருவுக்கு எல்லையாகவுள்ள அல்லது அதைச் சார்ந்துள்ள சுவர்கள் அல்லது அடைப்புகளின்விஷயத்தில், அவை எவ்வளவு உயரமுள்ளவையாயிருந்தாலுஞ் சரி அவைகளைக் கட்டுவது சம்பந்தமாய் மேல்விசாரணை புரிவது அவசியமாகும்.

பகுதிகள் 54, 55.—மியுனிஸிபல் எல்லைகளுக்கு மூன்று மைல் தூரத்துக்குள்ளிருக்கும் விஸ்தீர்ணத்தின் விஷயத்தில், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகள் முதலியவைகளுககு லைஸென்ஸ் கொடுப்பது சம்பந்தமாய் மியுனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் விசாரணை யதிகாரத்துக்குச் சம்பந்தப்பட்ட விவாதம் ஏற்படாமல் தடுப்பதே இந்தப் பகுதிகளின் நோக்கமாகும்.

56 முதல் 62 வரையிலுள்ள பகுதிகள்.—இந்தப் பகுதிகள் - சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 168, 170, 171, 174, 179, 180-வது பிரிவுகளை அனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன.

பகுதி 63.—இந்தப் பகுதியின் உத்தேசம் அதிலிருந்தே விளங்கும்.

பகுதி 64.—பாரவண்டி நிற்கும் இடங்களைக் குறித்து லோகல் போர்டுகளாக்டில் கண்டிருக்கும நிபந்தனைகள் இங்கே சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பகுதிகள் 65, 66.—பிரஸ்தாப பிரிவுகளின் அர்த்தத்தைத் தெளிவாக்குவதற்கு இந்தப் பகுதிகள் அவசியமாகும்.

பகுதி 67.—விதிகள் செய்வதற்காக சில அதிகப்படியான அதிகாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், இவையெல்லாம் பிரஸ்தாப ஆக்டில் ஏற்கனவே சொல்லியிருக்கும் காரியங்களுக்கே சம்பந்தப்பட்டவையாகும்.

பகுதி 68.—இப்போது ஷெட்யூல்களைச் சேர்ந்த சில பாகங்களை விதிகள் மூலமாய்த் திருத்தலாம். ஆனால், இதர பாகங்களை சட்டமூலமாக மாத்திரமே திருத்தக்கூடும். இந்தத் திருத்தமானது லோகல் போர்டுகளாக்ட் 201-வது பிரிவை அனுசரித்துச் செய்யப்பட்டிருக்கிறது.

பகுதி 69.—இந்தப் பகுதி இதர திருத்தங்கள் காரணமாய் ஏற்பட்டதாகும்.

பகுதி 70.—இதில் கண்டிருக்கும் அதிகப்படியான நிபந்தனைகள் அனுஷ்டானத்தில் அவசியமாயிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

பகுதி 71.—309-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவானது 310-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவைப்போலவே இருக்கும்படிச் செய்வதற்கு இந்தப் பகுதி அவசியமாகும்.

பகுதி 72.—லைஸென்ஸுகளுக்காகக் கட்டண விதங்களை நிஷ்கரிஷை செய்வதுடன், இன்ன பரிமாணங்களுக்கு கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டுமென்று நிஷ்கரிஷை செய்ய கௌன்ஸிலாருக்கு அதிகாரம் இருப்பதும் அவசியமாகும்.

பகுதி 73.—கவர்ன்மெண்ட் விளம்பரங்கள் சுதேச பாஷைகளில் ஜில்லா கெஜெட்டுகளிலே பிரசுரிக்கப்பட்டாகிறவரையில் அவை செலாவணியாவதை நிறுத்தி வைப்பதாயிருந்தால், அனுவசியமாய்க் காலதாமதம் ஏற்படும்.

பகுதி 74.—மியுனிஸிபல் வரிகளையாவது பாக்கிகளையாவது செலுத்தத் தவறிப்போனதற்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் விதிக்கப்படக்கூடிய அபராதத் தொகையுடன்கூட, வரிகளை வசூலிக்கும் விஷயத்தில் க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகளைப் பிரயோகிப்பதே இந்தப் பகுதியின் நோக்கமாகும்.

பகுதி 75.—இந்தப் பகுதியானது - சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டிலும் இந்துதேசத்து மதசம்பந்தமான இனுங்களைக் குறித்த மசோதா ஆக்டிலும் இதற்குப் பொருத்தமாயுள்ள நிபந்தனையை அனுசரித்து எழுதப்பட்டிருக்கிறது.

பகுதி 76.—பிரதேச அதிகார சபைகளுக்குள் ஏற்படும் விவாதங்களை கவர்ன்மென்டார் தங்களுடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன்மேலாவது தாஙகளாகவேயாவது பைசல் செய்ய அவர்களுக்கு இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிக அதிகாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கவர்ன்மென்டாரே தீர்மானஞ் செய்யலாம், அல்லது பிரஸ்தாப விஷயத்தை யாதொரு மத்தியஸ்தரின் அல்லது சபையின் அல்லது கூட்டுக்கம்மிட்டியின் தீர்மானத்துக்கு அனுப்பலாம்.

பகுதி 77.—இதில் செய்யப்பட்டிருக்கும் பிரதான மாறுதல்கள்—

(i) திருத்தங்கள் மூலமாய்ச் செய்யப்படும் மாறுதல்கள் பின்னோக்காய்ச் செலாவணியாவது விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதற்கும்,

(ii) வரிகள் விதிப்பதற்கும் புனராலோசனை மனுக்களுக்கும் சம்பந்தப்பட்ட விதிகளைச் சுலபமாக்குவதற்கும்,

(iii) இன்ன ஆதாரத்தைக் கொண்டு கம்பெனி வரி விதிக்க வேண்டுமென்பதற்கும்,

(iv) தொழில் வரி திட்டங்களை மறுபடியும் தரம் பிரிப்பதற்கும்

சம்பந்தப்பட்டவையாகும்.

பகுதி 78.—லோகல் போர்டுகளாக்டிலுள்ள அட்டவணையை அனுசரித்து (இந்தப் பகுதி) எழுதப்பட்டிருக்கிறது.

பகுதி 79.—வீத நிர்ணயத்தைப் பிரிவிலேயே சேர்த்துக்கொண்டதன் காரணமாக இந்தப் பகுதி அமைத்துக்கொள்ளப்பட்டது.

பகுதி 80.—கம்பெனி வரி விதிக்கப்பட்டதன்மேல் அப்பீல் செய்துகொள்வதற்காக இந்தப் பகுதியில் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

பகுதி 81.—வெளிப்படையாய் விட்டுப்போயிருந்த ஒரு அம்சத்தை இந்தப் பகுதியில் சேர்த்திருக்கிறது.

பகுதி 82.—வரி செலுத்தத் தவறிப்போனவர்களிடமிருந்து அபராதத்துடன்கூட வரியையும் வசூலிப்பதை சுலபமாக்குவதே இந்தப் பகுதியின் உத்தேசமாகும்.

பகுதி 83.—36-வது விதியின் ஒரு பாகத்தைப் பிரத்தியேகமான விதியாக மாத்திரம் இந்தப் பகுதியில் எடுத்தெழுதியிருக்கிறது.

பகுதிகள் 84, 85.—பிரதிபலன் தரக்கூடிய முயற்சிகளில் தலையிட்டுக்கொள்ளும் மியுனிஸிபல் கௌன்ஸில்களைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவே இந்தப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பகுதி 86.—இந்தப் பகுதியின் நோக்கம் அதிலிருந்தே விளங்கும்.

பகுதிகள் 87, 88.—இதர பகுதிகளின் காரணமாக இந்தப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

1923-ம் ௵ ஜனவரி௴ 22௳. பி. ராமராயனிங்கர்.

சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்.

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

சென்னைச் சட்ட நிரூபணசபையாரால் செய்யப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஜனவரி மீ 4வ கவர்னரவர்களாலும், 1923-ம் வருஷம் ஜனவரி மீ 20வ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

MADRAS ACT No. III OF 1923.

சென்னபட்டணம் 1923-ம் வருஷத்து 3-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE MADRAS CITY MUNICIPAL ACT, 1919.

1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1919-ம் வருஷத்துச் சென்னபட்டணம் 4-வது ஆக்ட்.

பீடிகை.

1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான 1922-ம் வருஷத்து ஆக்டென்று சொல்லலாம்.

12-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 12-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"கம்மிஷனரானவர் - முழுக்காலமும் வேலை செய்யும் நகர் விசாரணைச்சங்க உத்தியோகஸ்தராயிருக்கவேண்டும் ; மேலும், அவர் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியையும் நகர்விசாரணைச் சங்கத்தாரின் அனுமதியையும் பெற்றுக்கொள்ளாமல், தம்முடைய உத்தியோகத்துக்குச் சம்பந்தப்படாத எந்த வேலையையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது."

51-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 51-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்யவேண்டும் :—

(i) (a) குறிப்பிட்ட உட்பிரிவில், ஆரம்பத்திலிருக்கும் '(a)' என்னும் எழுத்தையும் நகலைவுக்குறிகளையும் விட்டுவிட்டு, அந்த உட்பிரிவின் கடைசியில் 'மற்றப்படிக்கும்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'மற்றப்படி' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(ii) (b) குறிப்பிட்ட உட்பிரிவு முழுவதையும் விட்டுவிடவேண்டும்.

85 (2)-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 85-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"ஷை உத்தியோகஸ்தர்கள் முழுக்காலமும் வேலை செய்யும் நகர் விசாரணைச்சங்க உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டும் ; மேலும், அவர்கள் - நகர் விசாரணைச்சங்கத்தாரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் தங்கள் தங்கள் உத்தியோகங்களுக்குச் சம்பந்தப்படாத எந்த வேலையையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது."

பி. எல். மூர்,
கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.